ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

11.07.2012 - மலர் 09, இதழ் 19

PUBLIC LIBRARY
JAFFNA



கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடிக்கக்கூடிய **கோள்கள்**

வாசகர் முகம்

'லொக்னெஸ்' ஏரியில் துலக்கப்படாத மர்மம்!

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்தியாவில் ஆட்சியைப் பாதுகாக்க இலங்கையில் யுத்த முகாம்

ஆங்கிலேயரால் கொல்கத்தா, சென்னை மற்றும் மும்பாய் ஆகிய மூன்று குடியேற்றங்களுக்கும் மூன்று ஆள்பதிகள் நியமிக்கப்பட்டனர். அவர்களின் பிரதான ஆள்பதி வங்காளத்தில் இருந்தார். அப்பொழுதும்கூட பிரான்சியரின் ஆதிக்கம் இந்தியாவில் முழுதாக நீங்கவில்லை. பிரான்சியருடன் நட்புப் பூண்ட அரசுகள் பல இந்தியாவில் இருந்தன. அதனால், எச்சந்தர்ப்பத்திலாவது ஆங்கிலேயருக்கு எதிராக பிரான்சியர் தாக்குதல்களை மேற்கொள்வர் என்ற சந்தேகம் ஏற்பட்டது. இந்தியாவில் பிரான்சியரின் அதிகாரத்தை முற்றுமுழுதாக நீக்கி ஆங்கிலேயரின் அதிகாரத்தை அந்நாட்டில் நிலைநாட்ட வேண்டுமாயின், மூன்று முக்கிய விடயங்களை நிலைநாட்டவேண்டும் என ஆங்கிலேயர் உணர்ந்தனர்.

முதலாவதாக, பிரான்சியருக்கு ஐரோப்பாவில் இருந்து படைகளும் யுத்த ஆயுதங்களும் வருவதைத் தடுக்க வேண்டும். அதற்கு இந்து சமுத்திரத்தின் கடலாதிக்கத்தை தம்வசப்படுத்த வேண்டும். இரண்டாவதாக, இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்குக் கரையோரப்பகுதிகளில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டும். மூன்றாவதாக இந்தியாவின் கிழக்குக் கரையில் உள்ள துறைமுகங்கள் அடிக்கடி பருவக்காற்று தாக்கங்களுக்கு உட்படுவதால், அங்கு எப்பொழுதும் கப்பல்களை நிறுத்தி வைப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

அதனால், வங்காள விரிகுடாவில் பலம் வாய்ந்த சிறந்ததொரு துறைமுகத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்பனவே ஆங்கிலேயரின் எதிர்பார்ப்பாக இருந்தது. இத்தகைய காரணங்களினால் ஆங்கிலேயர் இலங்கையில் துறைமுகம் ஒன்றை அமைக்க எண்ணினர். அத்துடன், சிலாபம், கொட்டியாரம் அல்லது மட்டக்களப்பு ஆகிய இடங்களில் குடியிருப்பு ஒன்றையும் அமைக்க எண்ணினர். இதற்காக, நாட்டின் வர்த்தகத்தைக் கைப்பற்ற எண்ணி அதற்காக 'பீபஸ்' எனும் தூதுவரை இலங்கைக்கு அனுப்பினர். அவர் கி.பி. 1762 இல் இலங்கைக்கு வந்தார். அப்பொழுது கண்டி ராச்சியத்தின் மன்னனாக கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் திகழ்ந்தான். அக்காலகட்டத்தில் கண்டி மன்னன் ஒல்லாந்தருடன் பகைமை கொண்டிருந்தான். அவர்களை நாட்டைவிட்டு விரட்டுவதற்கு வழி தேடியபடி காலம் கழித்து வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள்

நாட்டின் அரசாங்க மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற சுமார் 9,600 இற்கும் அதிகமான பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடைக்கின்றது. இது தொடர்பான சுற்று நிருபம் கல்வி அமைச்சினால் சகல பாடசாலைகளுக்கும் வலயக்கல்வி மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



இதற்கமைய, சகல பாடசாலைகளிலும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பாடசாலை வேளையில் அரை மணித்தியாலம் ஒதுக்கப்பட்டு மாணவர்கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

# தேசிய டெங்கு ஒழிப்பு மாதம் ஜூன் 25- ஜூலை 25 வரை



கடந்த மாதம் (ஜூன்) 25 ஆம் திகதியிலிருந்து இம்மாதம் 25 ஆம் திகதி வரையான ஒரு மாத காலப் பகுதியை தேசிய டெங்கு ஒழிப்பு மாதமாக அரசாங்கம் பிரகடனப் படுத்தியுள்ளது.

அரசாங்கமும் சுகாதார அமைச்சும் ஒன்றிணைந்து இந்த ஒரு மாத காலத்துக்குள் பல்வேறு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன. இதற்கென பல்வேறு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இந்த ஒரு மாதகாலத்துக்குள் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் இந்தக் குழுவினர் வீடுகள், நிறுவனங்கள் உட்பட பல்வேறு பகுதிகளை சோதனையிட வரலாம். அதன்போது, டெங்கு நுளம்புகள் பெருகும் வகையில் சுற்றுச் சூழலை வைத்திருப்போர் இனங் காணப்படும் பட்சத்தில், எந்தவித பாரபட்சமும் இன்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்பீடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனவே, டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்காக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுமாறு சுகாதார அமைச்சு பொதுமக்களைக் கோரியுள்ளது.

# கல்வியியல் கல்லூரிக்கான விண்ணப்ப காலம் நீடிப்பு

*2013 ஆம் ஆண்டில் கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுமதித்துக்கொள்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதி மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.*

*2011 ஆம் ஆண்டின் க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் இஸட் புள்ளிகள் வெளியிடுவதில் ஏற்பட்டுள்ள தாமதநிலை காரணமாகவே, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.*




*இதற்கமைய, மேற்படி இஸட் புள்ளிகள் வெளியிடப்படும் தினத்திலிருந்து இரண்டு வாரகால அவகாசத்தை கல்வியியல் கல்லூரிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு மாணவர்களுக்கு வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.*

*கல்வியியல் கல்லூரிகளுக்கு அனுமதித்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் ஜூலை மாதம் 13 ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும் என கல்வி அமைச்சு இதற்கு முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.*

# மிகையாக பாராட்டினாலும் மன அழுத்தம் ஏற்படும்!

## ஆய்வாளர்கள் எச்சரிக்கை



பிள்ளைகளை உற்சாகப் படுத்த வேண்டும் என்பதற்காக, அவர்களை தேவையற்ற நேரங்களிலும்கூட பாராட்டுவதனால், பிள்ளைகளுக்கு நன்மையைவிடத் தீமையே அதிகம் ஏற்படும் என ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகம் மற்றும் சிங்கப்பூர் நான்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் இது தொடர்பான ஆய்வில் ஈடுபட்டனர். தமது ஆய்வு குறித்து அவர்கள் கூறும்போது, நல்லவிதமான பாராட்டுகள், ஒருவர் விரக்தி அடையாமல் தடுக்கும். ஆனால், ஒருவரைப் பாராட்டிக்கொண்டே இருப்பதானது, அவரில் மனப் பயத்தை ஏற்படுத்துவதோடு, முன்னேற்றத்திற்கும் தடையாக அமைந்து விடும். அத்துடன், நாம் நல்ல எண்ணத்தில் தேவைக்கேற்ப பிள்ளைகளைப் பாராட்டினாலும், தேவையற்ற நேரங்களில் பாராட்டுவது அவர்களின் சுய மரியாதையைப் பாதிக்கும் என்றும் அதுவே சிலவேளைகளில் அவர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பாக, சுமார் 3,075 மாணவர்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர்.



இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், தங்கள் செயல்பாடுகளுக்கு ஏற்பப் பொருத்தமான பாராட்டைப் பெற்ற மாணவர்களைவிட, மிகையாக பாராட்டுக்களைப் பெற்ற மாணவர்கள் அதிக மன அழுத்தத்துக்கு உள்ளாவது தெரியவந்துள்ளது.

# கடந்த 6 மாதங்களில் 700 இற்கும் அதிகமான சிறுவர் துஷ்பிரயோகங்கள்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

இவ்வருடத்தின் கடந்த ஆறு மாதங்களுக்குள் 700 இற்கும் அதிகமான சிறுவர்கள் உடல் மற்றும் உள ரீதியாக துஷ்பிரயோகங்களுக்கு உட்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.



இவ்வருடத்தின் கடந்த ஆறு மாதகாலப்பகுதிக்குள் இவ்விடயம் தொடர்பில் 900 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவற்றில் 99 சதவீதமான முறைப்பாடுகள் குறித்து சட்டரீதியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் சிறுவர் மற்றும் பெண்கள் மீதான துஷ்பிரயோகங்கள் தொடர்பில் 1,700 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றில் 1,189 முறைப்பாடுகள் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பானதாகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது, இவ்வருடத்தின் முதல் ஆறு மாத காலப்பகுதிக்குள் இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# 340 தேசிய பாடசாலைகளில் 31,675 ஆசிரியர்கள் நியமனம்

நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள 340 தேசிய பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக 31,675 ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் அண்மைக்கால புள்ளிவிபரமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களில் 319 பேர் அதிபர்களாகவும் 14 பேர் பதில் அதிபர்களாகவும் 333 பேர் பிரதி அதிபர்களாகவும் 594 பேர் உதவி அதிபர்களாகவும் கடமையாற்றுகின்றனர். தவிர, 674 பேர் பகுதித் தலைவர்களாகவும் 29,253 பேர் ஆசிரியர்களாகவும் கடமையாற்றுவதோடு,



ஆசிரிய நியமனம் பெற்றவர்களில் 488 பேர் முழுநேரமாக விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

வாசகர் முகம்

'விஜய்'
முன் அட்டையில்
இந்த வாரம்
இடம்பெற்றிருப்பவர்
எஸ்.வினோதினி,
பூர்ணவத்த,கண்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்திற்கு முன்னர் நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தல்



### ஆளுநர் மெனிங் குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு முன்வைத்த ஆலோசனைகள்

* மாகாண மட்டத்தில் நியமிக்கும் உறுப்பினர்கள் தொகை 21 (இதில் சிங்கள பிரதேசங்களுக்கு 14 உறுப்பினர்களும் தமிழ் பிரதேசங்களுக்கு 7 உறுப்பினர்களும் நியமிக்க வேண்டும்)
* இன அடிப்படையில் நியமிக்கும் அங்கத்தவர் தொகை - 6 (இதில் ஐரோப்பியர்-3, பறங்கியர்-2 இலங்கைத் தமிழர்-1)
* இன அடிப்படையில் அரசு நியமிக்கும் அங்கத்தவர் தொகை-5 (இதில் இந்தியத் தமிழர்கள்-3, முஸ்லிம்கள்-2)
* விசேட காரணங்களுக்காக அரசால் நியமிக்கப்படுவோர்-3
* அதிகாரிகள் - 5

### ஆளுனர், ஆலோசகர் என்ற நிலை

தேசிய சங்கத்தின் சில பிரேரணைகளைத் தாம் ஏற்கத் தயாராக உள்ளதாக, ஆளுனர் மெனிங் தெரிவித்த போதிலும், அவர் தேசியசங்கம், தமிழ்த் தலைவர்களின் அமைப்பு ஆகியவற்றுக்கு முன்வைத்த வேண்டுகோள்களும் பிரேரணைகளும் முரணான, இனங்களிடையே மேலும் விரிசலை ஏற்படுத்தும் வகையில் அமைந்தன. அத்துடன், இப்பிரேரணைகளைப் பிரித்தானிய அரசாங்கத்தின் குடியேற்ற செயலாளரிடம் அவர் முன்வைத்தார்.

இத்தகைய சீர்திருத்தத்தின் விளைவாக 1924 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சட்டசபையானது, ஆரம்பம் முதற்கொண்டே மக்களின் வெறுப்புக்கு உள்ளாகியது. உள்நாட்டுத் தலைவர்களால் இந்த நிர்வாகத்திற்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகள் தீவிரமடைந்தன. இந்நிலையில் சட்டசபையில் மட்டுமன்றி, ஆளுனர் மெனிங்கின் அதிகாரத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டன. அதுவரை கட்டளையிடுபவராகப் பணியாற்றிய ஆளுனர், இதன்பின்னர் ஆலோசகர் என்ற நிலையை அடைந்திருந்தார். இந்த அரசியல் முறையானது, தாம் எதிர்பார்த்த அளவு திருப்தியானதாக இல்லை என்பதை நாளடைவில் ஏற்பட்ட சிக்கல்களைக்கொண்டு பிரித்தானிய அரசாங்கம் விளங்கிக்கொண்டது. இந்த நிர்வாகத்தின் பொருட்டு சபையின் ஒத்துழைப்பைப் பெறுவதும் பிரித்தானிய அரசாங்கத்திற்கு எளிதான விடையமாக இருக்கவில்லை.

இந்த அரசியல் அமைப்பின் குறைபாடுகள் மற்றும் அவை நாட்டில் ஏற்படுத்திய பாதகமான விளைவுகள் என்பன பிரித்தானிய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், இச்சட்டசபையானது, குழப்ப நிலையிலேயே இருந்தது. இதன் விளைவாக, நாட்டின் பொருளாதாரமும் படிப்படியே வீழ்ச்சியுற்றது. இதனால், 1925 ஆம் ஆண்டு ஆளுனர் மெனிங் பிரித்தானியாவுக்கு மீண்டும் அழைக்கப்பட்டதுடன், அவருக்குப் பதிலாக ஹியூகிளிபேட் என்பவர் நியமிக்கப்பட்டார்.

### டொனமூர் ஆணைக்குழு

இலங்கையின் நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள சிக்கலை நீக்கும் பொருட்டு நடவடிக்கைகளை எடுப்பதற்கும், இலங்கைக்குப் பொருத்தமான அரசியல் அமைப்புப் பற்றி ஆராய்வதற்கும் பொருத்தமான ஆணைக்குழு ஒன்றினை அனுப்பும்படி, ஹியூகிளிபேட் ஆளுனரால் பிரித்தானிய அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதன்படி, 1927 ஆம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழு இலங்கைக்கு வந்தது. டொனமூர் பிரபு அக்குழுவின் தலைவராக இருந்தார். மெத்திவ் நாதன், ஜெப்ரி பட்லர், டிரமன்ட் ஷீல்ஸ் ஆகியோர் அதில் அங்கம் வகித்தனர்.



ஆள்பதி மெனிங்



ஸ்ரீமத் மெத்திவ் நாதன்

டொனமூர் ஆணைக்குழுவின் சிபாரிசுகள் வரலாற்றின் முக்கிய திருப்பம் என உலகின் பல நாடுகளின் இராஜதந்திரிகள் கூறியபொழுதிலும், பூரண சுதந்திரத்தை வேண்டி நின்ற இலங்கையின் அரசியல் தலைவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். டொனமூர் ஆணைக்குழுவின் சிபாரிசுகளை தற்காலிகமான தொன்றாக மட்டுமே ஏற்றுக்கொண்ட அக்கால சட்டசபை, அதனை 21 மேலதிக வாக்குகளை மாத்திரம் கொண்டு அங்கீகரித்தது.

### சர்வஜன வாக்குரிமை

டொனமூர் ஆணைக்குழுவின் சிபாரிசுகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது 21 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இரு பாலாருக்குமான வாக்குரிமையாகும். 1924 ஆம் ஆண்டு தொடக்கம் ஏழு வருடங்கள் இருந்து வந்த சட்டசபை 1931 ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதியுடன் கலைந்தது. எனினும், அதே ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் திகதி சர்வஜன வாக்குரிமை நிலையான தன்மையை அடைந்தது. டொனமூர் அரசியல் அமைப்புக்கு அமைய இலங்கையில் முதலாவது பொதுத் தேர்தல் 1931 ஜூன் 15 தொடக்கம் தொடராக ஆறு நாட்கள் நடைபெற்றது. அன்று வாக்களிக்கத் தகுதியானவர்கள் எனப் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 15,77,932 ஆகும். அவர்களில் ஆண்கள் 9,78,548 பேர் ஆவர். 5,99,384 பேர் பெண்கள். எனினும், தமக்குரிய வாக்குரிமையைத் தேர்தலில் உபயோகிக்க முன்வந்தோர் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களில் அரைவாசியையும் விடக் குறைந்த தொகையினராவர். அதாவது 7,06,723 பேரே இத்தேர்தலில் வாக்களித்தனர். (அ)

---

## உங்கள் கவனத்திற்கு...

# டெங்கு நோயை தவிர்க்கும் வழிமுறைகள்



* இரண்டு நாட்களுக்கும் மேலாக, காய்ச்சல் நீடித்தால் தகுதிவாய்ந்த வைத்தியரிடம் நோயாளியை அழைத்துச் செல்லுங்கள்
* நோயாளி முழுமையாகக் கட்டிலில் இருந்தவாறு ஓய்வெடுக்க வேண்டும்.
* நீர் ஆகாரமே உட்கொள்ள வேண்டும். (வயது வந்த ஒருவர் 2,500 மில்லி லீற்றர் அளவு) ஜீவனி, செவ்விளநீர், கஞ்சி, பழச்சாறு என்பன நீரை விடச் சிறந்தவை.
* பெரசிட்டமோல் வகை மருந்துகளை மாத்திரம் குறிப்பிட்ட நேர இடைவெளியில் அருந்தவும். எஸ்பிரின் (Aspirin), ப்ரூஃபென் (Brufen) வகை மருந்துகளை உட்கொள்ளலாகாது.
* குழந்தைகள், பலவீனமானவர்கள், வேறு நோய்கள் உள்ளவர்கள், வைத்தியசாலைக்கு இலகுவில் செல்ல முடியாதவர்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.



### டெங்கை ஒழிப்பது மற்றும் தவிர்ப்பதற்கான வழிமுறைகள்

* டெங்கை ஒழிப்பதற்கு தனித்துவமான விசேட மருந்துகள் எதுவும் கிடையாது.
* ஊசியேற்றுதலும் இல்லை.
* நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை இல்லாதொழிப்பது, நாள்தோறும் இதுகுறித்து மிகுந்த அவதானம் செலுத்துவதன்மூலம் நுளம்புகளைக் கட்டுப்படுத்தலாம். நுளம்புகள் பெருகும் இடங்களை இல்லாதொழிப்பது, நீர் தேங்கி நிற்கும் நீர் தேங்கக்கூடிய பாத்திரங்களை தேங்கவிடாது தடுத்தல், மூடுதல் மற்றும் சுத்தப்படுத்தல்.
* பூச்சாடிகள் போன்றவற்றின் நீரை அடிக்கடி மாற்றுதல் சுத்தப்படுத்தல் மற்றும் உப்பு, எண்ணெய் போன்றவற்றை சேர்த்தல்.
* [illegible] மண் அல்லது மணல் நிரப்புதல். விற்கக்கூடிய கழிவுப் பொருட்களை விற்று அப்பணத்தை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தல்.
* கூரையின் மேற்பகுதியில் தேங்கிக் கிடக்கும் இலை குழைகள், தூசிகளை அடிக்கடி சுத்தம் செய்தல்.
* ப்ளாஸ்டிக், கண்ணாடிப்பாத்திரம், போத்தல், டின் போன்றவற்றை குழி தோண்டிப் புதையுங்கள் அல்லது அழியுங்கள்.
* நீரைச் சேகரிக்கும் பாத்திரங்களை மூடிவையுங்கள். வாரம் ஒரு முறையாவது அதனை சுத்தப்படுத்துங்கள்.
* சிரட்டைகளை சிறு சிறு துண்டுகளாக உடையுங்கள்.
* இளநீர் கோம்பைகளையும் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட சட்டி, பானைகளையும் சிறு சிறு துண்டுகளாக உடைத்துப் போடுங்கள். (அ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வி

## முகாமைத்துவம் - 115

### கற்றலுக்கான ஆலோசனைகள்

# மாணவர்களிடம் உற்சாகம் இருக்க வேண்டும்

எந்தவொரு காரியத்தைச் செய்வதாக இருந்தாலும் அதனை விருப்புடன் செய்ய வேண்டும். அந்த விருப்பத்தை உற்சாகத்தோடு செய்யவேண்டும். உற்சாகம் இருந்தால் எந்தக் காரியத்தையும் மனம் விரும்பி செய்து முடிக்கலாம்.

கல்வி கற்பதற்கும் உற்சாகம் மிகவும் அவசியமாகின்றது. மாணவப் பருவத்தை சோம்பல் தனத்துடன் வீணே கழித்துப் பின்னர் சிந்தித்துப் பயன் இல்லை. எனவே, ஆரம்பத்திலேயே உற்சாகத்தோடு செயற்பட வேண்டும்.







பாடங்களைக் கற்கும்போது, தனக்குள் உற்சாகத்தை வரவழைத்துக்கொள்ள வேண்டும். நான் சிறப்பாகக் கல்வி கற்க வேண்டும்; பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெறவேண்டும் போன்ற ஆர்வத்தை ஏற்படுத்திக்கொண்டால், உற்சாகம் தானாக வந்துவிடும்.

அதிகாலையில் எழும்போதே, அன்றைய நாளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?, என்ன செயற்பாடுகளைச் செய்ய வேண்டும்? போன்ற திட்டங்களை மனதிற்கொள்ள வேண்டும். அதேவேளை, அவ்வாறான செயற்பாடுகளைச் செய்ய நேரத்தை வகுத்துக்கொள்ளவும் வேண்டும். நேரப்பகுப்புடன் கற்க வேண்டும் என்று நினைத்து செயற்பட்டால், அந்நாளை உற்சாகத்தோடு பயன்படுத்திக்கொள்ள முடியும்.

அத்துடன், வகுப்பறையில் கல்வி கற்கும்போதும் மாணவர்கள் உற்சாகத்தோடு செயற்பட வேண்டும். உற்சாகத்தோடு செயற்பட்டால்தான் எமது செயற்பாடுகளை திருப்தியுடனும் நிறைவாகவும் செய்ய முடியும். உற்சாகத்தோடு செயற்பட்டால் உடல் அலுப்பு, சோம்பேறித்தனம் என்பன எம்மை நெருங்கா.

கல்வி கற்பதற்கு உடல், உள ஆரோக்கியம் அவசியம். அந்தவகையில், உடலில் உற்சாகம் ஏற்பட்டால் அது கற்றலுக்கு ஏதுவான மனநிலையை ஏற்படுத்திக்கொடுக்கும். மனநிலை சிறப்பாக இருக்குமானால், கற்றலைத் தயக்கமின்றி, உற்சாகத்தோடு மேற்கொள்ளலாம்.

வெறுப்போடும் சோம்பேறித்தனத் தோடும் கல்வி கற்றால், அவை மனதில் சரிவரப் பதியா. சிறிது காலத்தின் பின் கற்றவையாவும் மறந்துவிடும். ஆனால், மனம் விரும்பி, உற்சாகத்தோடு கல்வி கற்றால் கற்றவை இலகுவாக மனதில் பதிந்துவிடும்.

உற்சாகத்தோடு கல்வி கற்றால் அதிக பாடங்களை கற்றுக்கொள்ள முடிவதோடு, கூடுதலான நேரத்திற்கு கற்றலை மேற்கொள்ளக்கூடியதாகவும் இருக்கும். ஆகவே, உற்சாகத்தோடு செயற்பட்டு எமது இலக்கை அடைய முன்நிற்போம்.

(தொடரும்)

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**



# முப்பரிமாண (3D) சொக்கலட் பிரிண்டர்

உங்களுக்கு விருப்பமான உணவுப் பண்டங்களை இந்த முப்பரிமாண (3D) சொக்கலட் பிரிண்டர் மூலம் மெருகூட்டிக்கொள்ளலாம். அத்துடன், உங்கள் விருப்பம்போல் பல்வேறு வடிவங்களில் சொக்கலட்டுக்களைத் தயாரித்துக்கொள்ளலாம். இந்தப் பிரிண்டர் இயந்திரமொன்றின் விலை 2,500 அமெரிக்க டொலராகும். அதாவது, இலங்கை நாணயப்படி, சுமார் 3 லட்சம் ரூபாவையும் தாண்டுகிறது.

இந்த சொக்கலட் பிரிண்டர் இயந்திரத்தினூடாக, உங்களுக்குப் பிடித்தமான உணவினை சொக்கலட்டினாலேயே அலங்கரித்து மெருகூட்டிக் கொள்ளலாம். இந்த சொக்கலட் பிரிண்டர் இயந்திரம் உங்கள் கணினியின் பணிப்புரையின்படி செயற்பட்டு, நீங்கள் தயாரித்துள்ள உணவுப் பண்டங்களை உங்களது தேவைக்கேற்ப சொக்கலட் கலவையால் மெருகூட்டுவதோடு, அதன் சுவையை மேலும் அதிகரிக்கச் செய்கிறது.



சொக் எட்ஜ் உருவாக்குனர் கலாநிதி லியென் ஹோ

இந்த முப்பரிமாண பிரிண்டர் இயந்திரத்திற்கு 'ச்சொக் எட்ஜ்' (3D) என்று பெயரிட்டுள்ளனர். அமெரிக்காவின் எக்ஸ்டர் பல்கலைக்கழகத்தின் கலாநிதி லியேன் ஹோ என்பவரே இதன் உருவாக்குனராவார்.

"தற்போதளவில் இந்த இயந்திரத்தினை மேலும் பாவனைக்கு இலகுவாக்கும் விதத்தில் மாற்றியமைத்துள்ளோம். இதனைப் பயன்படுத்தும்போது, சொக்கலட்டினை உருக்கி இதில் உள்ள சிரின்ஜ்ஜரில் நிரப்பி பிரிண்டருக்குள் இட வேண்டும்" என்று ஹோ விபரித்துள்ளார்.

## விசேட கட்டுப்பாட்டுத் தொகுதி

ரேகைகளின் அடிப்படையில் வரைபுகளை உருவாக்குவதே முப்பரிமாண அச்சுத் தொழில்நுட்பத்தின் இயங்கு தன்மையாக உள்ளது. இந்த தொழில்நுட்பம் இதுவரை பிளாஸ்டிக் மற்றும் உலோகங்கள் தொடர்பிலான தொழிற்சாலை சார்ந்த பணிகளுக்கே பயன்படுத்தப்பட்டு வந்தது. சொக்கலட்டுகளுக்கு பயன்படுத்தப்படுவது இதுவே முதற்தடவையாகும்.





சொக்கலட்டுகளைப் பயன்படுத்தி பல்வேறு மெருகூட்டல்களைச் செய்யலாம்

இந்த தொழில்நுட்பத்தை சொக்கலட்டுக்குக் கையாள்வது இலகுவான காரியமன்று. ஏனெனில், இதற்கு உரியவாறு வெப்பமாக்கும் மற்றும் குளிராக்கும் செயற்பாடு காற்றோட்ட முறையில் நடைபெற வேண்டியுள்ளது. இதனால், சொக்கலட் முப்பரிமாண அச்சு செயற்பாட்டுக்கென பிரத்தியேகமான சிறப்பு கட்டுப்பாட்டுத் தொகுதி ஒன்றினை உருவாக்க வேண்டிய அவசியம் இதன் உருவாக்குனருக்கு ஏற்பட்டுள்ளது.

"இந்த முறையில் உள்ள விசேட அம்சம் என்னவெனில், நீங்கள் விரும்பும் எந்தவோர் உருவத்தினையும் முப்பரிமாணத்தில் பயன்படுத்திக்கொள்ள முடியும். இதில் மேற்கொள்ளக்கூடிய வேலைகளுக்கு வரையறையே இல்லை" என்று கலாநிதி ஹோ குறிப்பிடுகின்றார்.

சொக்கலட்டினைப் பயன்படுத்தும்போது, வீண் விரயம் என்று ஏதுவும் இல்லை. ஏனெனில், தவறுதலாக ஏதாவது உருவ மாற்றம் நிகழ்ந்தாலும் அதனை உட்கொள்ள முடியும்" என்று ஹோ மேலும் குறிப்பிடுகின்றார்.



சொக்கலட் எட்ஜ் இயந்திரத்தினால் முப்பரிமாண சொக்கலட் வடிவங்கள் இடப்படும் விதம்

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'லொக்

ஸ்கொட்லாந்தின் 'லொக்னெஸ்' ஏரியின் ஆழ்ப்பகுதியில் வாழ்வதாகக் கருதப்படும் ஓர் உயிரினம் குறித்து பல வதந்திகள் மற்றும் கதைகள் உலா வந்த வண்ணமுள்ளன. ஆனால், இந்த உயிரினம் குறித்த உண்மைத் தன்மைகளை நிரூபிக்கக்கூடிய பிரபல்யமான சான்று கிடைத்துள்ளதாக லொக்னெஸ் ஏரியில் சிறிய மீன்பிடிப் படகில் சஞ்சரிக்கும் கெப்டன் மாக்கஸ் எட்கின்ஸான் என்பவர் கூறுகின்றார். லொக்னெஸ் ஏரியின் சோனார் புகைப்படம் ஒன்றினை வைத்தே அவர் இந்த சான்றினை முன்வைக்கின்றார். அந்தப் புகைப்படத்தில் பாம்பு போன்றதொரு நீண்ட ஏதோ ஓர் உருவம் தென்படுகின்றது. 30 மீற்றரைவிடவும் அதிக ஆழமுடைய இந்த ஏரியின் 23 கி.மீ பகுதியில் இந்த பாம்பு போன்றதொரு உயிரினத்தின் பகுதி தென்படுகின்றது. இந்த மர்ம உயிரினம் 5 அடி நீளத்தைக் கொண்டுள்ளது


கெப்டன் எட்கின்ஸான்








இந்த மர்ம உருவம் சோனார் புகைப்படத்தில் பதிவாகும்போது, கெப்டன் எட்கின்ஸானின் படகு 'உர்க்குஷாட்' வளைகுடா அருகில் பயணித்துக் கொண்டிருந்தது. இந்த மர்ம உயிரினம் இந்தப் படகின் பின்னால் இரண்டு நிமிடங்கள் பயணித்துள்ளது.எனினும், இவ்வாறான மர்ம விடயங்களை ஆய்வு செய்யும் விஞ்ஞானிகள் இது ஒரு மீனாகவோ அல்லது மீன் கூட்டமாகவோ இருக்கலாம் என்று கூறுகின்றனர்.

கிறிப்டொகூலொஜி (Cryptozoology) என்பது மர்ம உயிரினங்கள் பற்றிய விஞ்ஞானக் கற்கையாகும். பொதுவான உயிரினக் கோட்பாடுகளுக்குள் உள்ளடங்காத உயிரினங்கள் 'மர்மமான உயிரினங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. அதாவது, லொக்னெஸ் ஏரியின் நெசி, இமயமலை பனி மனிதன் யெட்டி, அமெரிக்காவின் Big foot என்பனவற்றை இதற்கு உதாரணமாகக் கூற முடியும்.

ஸ்கொட்லாந்தின் லொக்னெஸ் ஏரியின் இந்த மர்ம உயிரினத்தின்மீது ஸ்கொட்லாந்து வாசிகள் பேரன்பு கொண்டிருக்கின்றனர். அவர்கள் செல்லமாக இதனை 'நெசி' என்று அழைக்கின்றனர். நெசி உயிர்வாழ்வதாகக் கருதப்படும் லொக்னெஸ் ஏரி ஸ்கொட்லாந்தின் மலைப்பகுதியில் அமைந்துள்ள மிகப்பெரிய ஆழமான நன்னீர் ஏரியாகும். இவர்னஸ் பிராந்தியத்திற்கு தென்கிழக்கில் உள்ள இந்த ராட்சத ஏரி 37 கிலோமீற்றர் அதாவது, 23 மைல்கள் கொண்ட பகுதி முழுவதும் வியாபித்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 52 அடி தூரம் அதாவது 15.8 மீற்றர் உயரத்தில் உள்ளது. இந்த மர்ம உயிரினம் காரணமாக, ஸ்கொட்லாந்தின் இந்த ஏரி உலகம் முழுவதும் பிரபல்யம் அடைந்துள்ளது. இங்கிலாந்து மற்றும் வேல்ஸைவிட அதிகளவான நன்னீரை இந்த ஏரியால் சேகரித்துக்கொள்ள முடியும். இந்த மர்ம உயிரினத்தினை 'லொக்னெஸ் ஏரியின் ராணி' என்கின்றனர்.

## கற் சிற்பங்கள்

முதலாம் நூற்றாண்டில் ரோமானியர்கள் ஸ்கொட்லாந்தினை ஆக்கிரமித்த போது, அங்கு வாழ்ந்தவர்கள் பிக்ட்ஸ் பழங்குடியினராவர். இவர்கள் அதி திறமை வாய்ந்த சிற்பக் கலைஞர்களாக இருந்தனர். அவர்கள் தமது சுற்றுப்புறச் சூழலில் உள்ள விடயங்களையும், விலங்குகளையும் கற்களில் செதுக்கி வைத்தனர். இந்த கற் சிற்பங்களை புதைபொருள் அகழ்வாராய்ச்சியாளர்களும் உயிரியல் விஞ்ஞானிகளும் இலகுவாக அடையாளம் கண்டுள்ளனர். ஆனால், ஒரு விலங்கினை அவர்களால் இனம்காண முடியவில்லை. இதன் தோற்றம் மிகவும் வித்தியாசமாக இருந்தது. நீளமான கழுத்து, நீண்ட வால், பிரமாண்டமான பெரிய உடல் கொண்ட விலங்காக அந்த விலங்கு காணப்பட்டது. அதில் கால்கள் காணப்படவில்லை. ஆனால், நீந்தும் செதில்கள் இருந்தன. இந்த உயிரினம் நீர்வாழ் உயிரினமாகவே சித்தரிக்கப்பட்டிருந்தது.

## சவால் ஒன்று

இதற்கு 5 நூற்றாண்டுகளுக்குப் பின்னர் கொலம்பா என்ற மதகுரு கிறிஸ்தவ மதத்தினைப் போதிக்கவும் பிரசாரம் செய்யவும் ஸ்கொட்லாந்துக்கு வருகை தந்திருந்தார். அப்பொழுது பிக்ட்ஸ் பழங்குடியினர் ஏரியில் வாழும் ஒரு மர்மமான ராட்சத உயிரினம் குறித்து அவரிடம் முறையிட்டுள்ளனர். அவர் தமது பரிசுத்தமான சக்தியினைப் பயன்படுத்தி அந்த விலங்குக்கு சவாலிட்டுப் பயமுறுத்தியுள்ளார். இதனால், அந்த உயிரினம் அச்சத்தில் அவ்விடத்தைவிட்டு அகன்றுவிட்டதாகவும், பிக்ட்ஸ் பழங்குடியினருக்கு அந்த உயிரினத்தால் எவ்வித தொல்லையும் ஏற்படாமையினால் அதன்பின்னர், ஸ்கொட்லாந்து பழங்குடியினர் கிறிஸ்தவ மதத்தினைத் தழுவிக்கொண்டனர் என்றும் கூறப்படுகின்றது. அந்த மர்மமான உயிரினத்தின் உண்மை, பொய் எதுவாயினும் ஸ்கொட்லாந்தில் கிறிஸ்தவ மதத்தினைப் பரப்ப அந்த உயிரினம் உதவியது என்று கூறமுடியும். இதன் நூற்றாண்டுகளுக்கு பின் கொலம்பா மதகுரு பற்றிய விபரத்திரட்டு ஒன்றிலேயே இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

## பாதச்சுவடுகள்

1933 இல் நெசியின் புகைப்படம் வெளியானது முதல் நெசி அனைவராலும் பேசப்படும் ஒரு விடயமாகியது. இங்கிலாந்து பத்திரிகை ஒன்று இவ்விடயத்தினை அடிப்படையாக வைத்து பிரபல்யம் தேடிக் கொள்வதற்காக அதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. நெசியின் பாதச்சுவடுகளை ஒரு வேட்டைக்காரர் கண்டுபிடித்ததாக அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுப் பரபரப்பினை ஏற்படுத்தியது. எனினும், இறுதியில் இந்த பாதச்சுவடுகள் போலியானவை என்று ஆய்வுகூடத்தில் நிரூபணமானது. மாமடுக் வெதரெல் என்பவரை இந்த நாடகத்திற்காக, அப்பத்திரிகை கூலிக்கு அமர்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாவமன்னிப்பு

பாதச்சுவடுகள் பொய் என்று நிரூபணம் ஆனாலும், நெசி குறித்த விடயங்கள் உண்மையானவை என்று நிரூபிக்க வெதரெல் பெரும் பிரயத்தனத்தில் ஈடுபட்டார். அவரும் அவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA.



# னெஸ்’ ஏரியில் துலக்கப்படாத மர்மம்!



இரண்டு புதல்வர்களும் இணைந்து லொக்னெஸ் உயிரினத்தின் போலிப் புகைப்படம் ஒன்றைத் தயாரித்தனர். இன்று உலகம் முழுவதும் பிரபல்யம் பெற்றுள்ள புகைப்படம்தான் அது. அவர்கள் விளையாட்டு நீர்மூழ்கி ஒன்றில் விளையாட்டுப் பொருளான பாம்பின் தலையைப் பொருத்தினர். தூரத்தில் இருந்து பார்க்கும் அது உண்மையான உயிரினமாகத் தென்பட்டது. அவர்கள் பெற்றுக்கொண்ட புகைப்படத்தினை பிரதி எடுக்கும் பொறுப்பு இந்த உயிரினம் குறித்து ஆர்வம் கொண்டிருந்த லண்டன் நகர பிரசவ வைத்தியர் ரொபர்ட் வில்சனுக்கு கையளிக்கப்பட்டது. அவர் அவற்றை பிரதி எடுத்து, தான் எடுத்த புகைப்படங்கள்



என்று கூறி பத்திரிகைகளில் பிரசுரிக்கச் செய்தார். உலகம் முழுவதும் பரபரப்பினை ஏற்படுத்திய இந்த நிகழ்வின் பின்னரேயே, இந்த உயிரினம் பற்றிய ஆராய்ச்சிகளும் உத்வேகமடைந்தன. இந்தப் புகைப்படம் பிரசுரமாகி 61 ஆண்டுகளின் பின்னர் அது 1933 ஏப்ரல் முதலாம் திகதி முட்டாள்களின் தினத்தில் செய்யப்பட்ட வேடிக்கை என்று வெளியானது. 1994 இல் மரணப் படுக்கையில் வைத்து வெதரெல் இவ்விடயத்தை உலகுக்கு வெளிப்படுத்தினார். அவர் தனது புதல்வர்களுடன் இணைந்து போலியான ஒரு புகைப்படத்தினைத் தயாரித்த விடயத்தினை வெளிப்படுத்தி பாவமன்னிப்புக் கோரினார். எனினும், உலக மக்களின் அவதானத்தினை இந்த புகைப்படம் பெறும் என்று தாம் ஒருபோதும் சிந்திக்கவேயில்லை என்று கூறிய ரொபர்ட் வில்சன் அதனை பொய் என்று கூறத் தயக்கம் காட்டினார்.

இந்தப் புகைப்படம் உண்மையாகவும் இருக்கலாம் என்று அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

## ஒலி அலைகள்

கதைகள் மற்றும் வரலாறுகள் காரணமாக, நெசி தற்போது ஒரு வீராங்கனையாகியுள்ளது. நெசியினால் ஸ்கொட்லாந்தின் சுற்றுலாத்துறை பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. நெசியின் தயவால் வாழும் வியாபாரிகளே நெசிமீது, பேரன்பு காட்டுகின்றனர். கற்பனை அல்லது மர்மம் எதுவாக இருக்கட்டும் நெசியினால் அப்பிரதேச வருமானம் வருடாந்தம் 40 மில்லியன்களாக உள்ளது.

கடந்த ஆண்டுகளில் சோனார் உபகரணத்தினைப் பயன் படுத்தி பலதரப்பட்ட ஆராய்ச்சிக் குழுக்கள் நெசியை தேடிக் கண்டுபிடிக்க முயற்சித்து வருகின்றனர். 1967 இல் முதலாவது சோனார் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 1968 இங்கிலாந்து பேராசிரியர் டி.பி.டக்கர் தலைமையிலான இங்கிலாந்தின் பர்மிங்ஹாம் பல்கலைக்கழக மின் பொறியியல் பீடத்தின் ஆய்வுக்குழு ஆய்வில் ஈடுபட்டது. அதன்பின்னர் அமெரிக்க நியூயோர்க் நகர கடல் உயிரியல் விஞ்ஞானி அன்ட்று கரோல் 1969 இல் லொக்னெஸ் ஏரிக்கு வருகை தந்து சோனார் ஆய்வுகளை மேற்கொண்டார். இதன்பின்னர் வைப்பர் பிஷ் மற்றும் டீப்ஸ்டார் 3 ஆகிய நீர்மூழ்கிகள் லொக்னெஸ் ஏரியின் ஆழ்பகுதிகளை ஆய்வு செய்தது. அமெரிக்க சிக்காகோ பல்கலைக்கழகத்தின் உயிரியல் விஞ்ஞான பேராசிரியர் ரோய் மெக்கெல் தலைமையிலான குழு நெசியைக் கண்டுபிடிக்கும் மிகப் பாரிய ஆராய்ச்சிப் பயணத்தினை ஆரம்பித்தது. இந்த ஆராய்ச்சி 1970 ஆம் ஆண்டு நடைபெற்றது. அவர்கள் ஆராய்ச்சிப் பணிகளுக்காக, ஒலி அலைகளைப் பதிவு செய்யும் மைக்ரோ ஃபோன்களைப் பயன்படுத்தினர். 300 முதல் 600 அடி ஆழமான ஏரியின் ஆழ்ப் பகுதிக்குள் இந்த மைக்ரோ போன்கள் அனுப்பப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன.

## குற்றச்சாட்டு

1972, 1975 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் ஆய்வாளர் எச்.ரைன்ஸ் தலைமையிலான குழு மேற்கொண்ட ஆய்வுகளின்போது, ஏரியின் ஆழ் பகுதியின் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. இதன் போது எடுக்கப்பட்ட புகைப்படத்தில் தெளிவற்ற விதத்தில் நீந்தும் துடுப்பு ஒன்று தெரிந்தது. 1975 இல் இந்த புகைப்படத்தினை ஆய்வுசெய்த பிரித்தானிய இனத்தவரான பீற்றர் ஸ்கொட் எனும் இயற்கையியலாளர் அதுவே நெசி என்றும் அதற்கு விஞ்ஞானப் பெயர் ஒன்றினையும் சூட்டினார். நெசிட்டெராஸ் ரொம்பொப்டெரிக்ஸ் (Nessiteras) என்பதே அதுவாகும். கிரேக்க மொழியில் இதன் பொருள், ‘மாணிக்கக்கல்லின் வடிவிலான துடுப்புக் கொண்ட லொக்னெஸ் ஏரியின் மர்ம உயிரினம்’ என்பதே ஆகும். எனினும், இது மிகப்பெரிய ஒரு பொய் என்று பீற்றர் ஸ்கொட் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

## தெளிவற்ற உருவப்பதிவுகள்

1993 இல் டிஸ்கவரி தொலைதொடர்பு வலையமைப்பினால் லொக்னெஸ் ஏரியில் ஆய்வு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது, அவர்கள் நெசியைக் கண்டுபிடிக்கும் வேலையுடன் லொக்னெஸ் ஏரியில் அது உயிர் வாழக்கூடிய இதுவரை இனம்காணப்படாதிருக்கும் புதிய உயிரினங்கள் குறித்து அவதானம் செலுத்தினர். நெசி தொடர்பாக இறுதியாக மேற்கொள்ளப்பட்ட நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு மேற்கொண்ட ஆய்வு 2001 இல் மேற்கொள்ளப்பட்டது. சர்வதேச ஆய்வாளர்கள் இணைந்து இந்த ஆய்வினை மேற்கொண்டனர்.

மேற்கொள்ளப்பட்ட சகல ஆய்வுகளிலும் கிடைத்த சோனார் திரைக் குறிப்புகளில் தெளிவற்ற உருவங்கள் பல உள்ளன. இது நீரில் நீந்திச் செல்லும் பெரிய செமன் மீன்களாகவோ அல்லது வேறு ஏதாவதாகவோ இருக்கக்கூடும் என்றும் கருதப்பட்டது. ஆனால், நெசி இருப்பதற்கான அடிப்படைச் சான்றுகள் ஒன்றுகூடக் கிடைக்கவில்லை. 2003 இல் லொக்னெஸ் ஏரியின் கரைப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் அகழ்வாராய்ச்சியின்போது புதைபடிமஎச்சமான முழுமையான 4 முள்ளந்தண்டுகள் கொண்ட எலும்புத் தொகுதி கண்டுபிடிக்கப்பட்டது. இந்த எலும்புகள் ‘பேலியோஸோர்’ எனும் பண்டைய கால டைனோஸர் இனத்தினைச் சேர்ந்தது என்று பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. பண்டைய காலத்தில் வாழ்ந்த நீர்வாழ் டைனோஸரே இந்த பேலியோஸோர். இதன் தலை சிறுத்திருக்கும். நீளமான கழுத்து ராட்சத உடல் மற்றும் அதில் துடுப்புகள் கொண்ட நான்கு கால்களும் நீண்ட வால் பகுதியும் உள்ளது.

## புதிய தர்க்கம்

நெசி என்பது பேலியோஸோர் டைனோஸர் என்று நிரூபிப்பது இலகுவான விடயமல்ல. ஏனெனில், இந்த டைனோஸர்கள் கடலில் வாழ்ந்தவை. அதாவது, உப்பு நீரில் வாழ்ந்தவை. இவை நன்னீர் ஏரிகள், வாவிகளில் வாழவில்லை. லொக்னெஸ் ஏரி கடலுடன் தொடர்புடையது. ஆயினும், அது நன்னீரால் சூழப்பட்டது. பேலியோஸோர் உயிரினமானது உப உலர் வலயத்திற்குரிய நீர்வாழ் உயிரினமாகும். அவற்றால் லொக்னெஸ் போன்ற ஆழம் அதிகமான குளிர் கொண்ட ஏரியில் வாழமுடியாது. மேலும், மற்றொரு முக்கிய விடயம் யாதெனில், பேலியோஸோர் உட்பட ஏனைய டைனோஸர் இனங்கள் 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உலகில் வழ்ந்தவை. ஆனால், லொக்னெஸ் ஏரி இறுதி குளிர்யுகத்தில் தோன்றியது. அதாவது, சுமார் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எவ்வாறாயினும், நெசி பற்றிய வாதவிவாதங்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. இந்த விடயங்கள் அவ்வாறே நிகழ்ந்து கொண்டிருக்கும்போது, சுற்றுலாப் பயணிகள் லொக்னெஸ் ஏரியைப் பார்வையிடவும் நெசியைப் பார்க்கவும் கூட்டம் கூட்டமாக வருகை தந்து கொண்டிருக்கின்றனர். சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பினாலும் லொக்னெஸ் ஏரியை சூழவுள்ள பகுதிகளில் சுற்றுலாத்துறை சார்ந்த வேலைகள் மற்றும் வியாபாரங்கள் நாளுக்கு நாள் முன்னேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# லிச்டென்ஸ்டெய்ன்


வாடுஸ் கோட்டை (லிச்டென்ஸ்டெய்ன் ஆட்சியாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம்)

**அரசு:** ஒரு சட்ட சபையைக்கொண்ட பல கட்சி வரம்புடைய முடியரசு.

**சுதந்திரமும் அதிகாரமும்:** ப்ரெஸ்பர்க் பிராந்தியம் - 1806; ஜேர்மன் கூட்டாட்சியில் இருந்து - 1866.

**தேசிய பெயர்:** ஃபியூஸ்டென்டம் லிச்டென்ஸ்டெய்ன்.

**தேசிய விடுமுறை தினம்:** உருவாக்கப்பட்ட தினமாகிய ஒகஸ்ட் 15.

**ஆட்சியாளர்** (1989): இளவரசர் இரண்டாம் ஹேன்ஸ் அடெம்.

**பிரதமர்** (2009): க்ளெஸ் டிஸ்சச்சர்.

## புவியியல்

ரைன் நதியின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள லிச்டென்ஸ்டெய்ன் நாட்டின் கிழக்கே ஒஸ்ட்ரியாவும் மேற்கு மற்றும் தெற்கில் சுவிற்சர்லாந்தும் எல்லைகளாக அமைந்துள்ளன. இது நாற்புறமும் நிலப்பரப்பால் சூழப்பட்ட ஒரு மத்திய ஐரோப்பிய நாடாகும்.

**மொத்தப்பரப்பு:** 62 ச.மைல் (161 ச.கி.மீற்றர்).

**நிலப்பிரிவுகள்:** 11 கூட்டுக்கள்.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** வாடுஸ்.

**உயர் மலைச்சிகரம்:** க்ரோஸ்பிட்ஸ் (2,599 மீற்றர்).

**தாழ்மையம்:** ரக்கெல்லர் ரையட் (430 மீற்றர்).

**சனத்தொகை** (2010): 35,002.

**நாணயம்:** சுவிஸ் ஃப்ரேங்.

**மொழிகள்:** ஜேர்மன் (உத்தியோகபூர்வமொழி), அல்மெனிக் உரையாடல் மொழிகள்.







**இனக்குழுவினர்கள்:** அல்மெனிக் 86%; இத்தாலியர், துருக்கியர்,மற்றும் ஏனையோர் 14%.

**சமயங்கள்** (2002): ரோமன் கத்தோலிக்கம் - 77%, புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் -7%, மதம் சாராதவை-11%.

**எழுத்தறிவு** (1981): 100%

**இணையத்தளக் குறியீடு:** .li

**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** +423

**தேசிய கீதம்**

Oben am jungen Rhein
Lehnet sich Liechtenstein
An Alpenhöh'n.
Dies liebe Heimatland,... என

ஆரம்பமாகின்றது.

## வரலாறு

முற்காலத்தில் ரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாக இந்நாடு இருந்தது. கி.பி. 500 ஆம் ஆண்டிற்குப் பின் அலமென்னி இன மக்கள் லிச்டென்ஸ்டெய்னில் குடியேறினர். பரம்பரை மன்னராட்சி நிலவிய இப்பிரதேசம், 1719 இல் ஒரு தனித்துவ நாடாக இனங்காணப்பட்டது. கி.பி. 1815 ஆம் ஆண்டு நடைபெற்ற வியன்னா மாநாட்டின் பின்னர், லிச்டென்ஸ்டெய்ன் ஜேர்மன் கூட்டாட்சியின் ஓர் அங்கத்துவ நாடாகத் திகழ்ந்தது. 1866 இல் ஜேர்மனிய ஐக்கியத்தின் பின் இந்நாடு சுதந்திர நாடாகப் பரிணமித்தது. அன்றுமுதல் தனி அரசாட்சி நாடாகத் திகழ்ந்து வருகின்றது. 1868 இல் நாட்டில் ராணுவம் விலக்கிக்கொள்ளப்பட்டது. அத்தோடு, ராஜரீக தொடர்புகள் அனைத்தும் சுவிற்சர்லாந்து நாட்டின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. தற்போது செக் குடியரசிற்குச் சொந்தமாக உள்ள 1,600 ச.கி.மீற்றர் நிலப்பரப்பிற்கு லிச்டென்ஸ்டெய்ன் உரிமைகோரி வருகிறது. இப்பிரதேசத்தில் தமது நாட்டின் பாரம்பரிய மன்னரின் பழமைவாய்ந்த உத்தியோகபூர்வ மாளிகை இருப்பதே இதற்குக் காரணமாகும். 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பில், அரசை நீக்கவும் நீதிமன்ற நடவடிக்கைகளில் இறுதித் தீர்ப்பை வழங்கவும் அந்நாட்டு மக்கள் மன்னருக்கு அதிகாரத்தை வழங்கினர்.


பிரதமர்


ஆட்சியாளர்

## காலநிலை

சிறிதளவிலான மாறுபட்ட காலநிலையைக்கொண்ட நாடாக, லிச்டென்ஸ்டெய்ன் திகழ்கின்றது. எனினும், கோடைகாலத்தில் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் வெப்பத்துடன்கூடிய உலர் காலநிலையைக் காணலாம். அத்துடன், மாரிகாலம் குளிரும் இதமான காலநிலையையும் கொண்டதாகக் காணப்படுகின்றது.


தலைநகரின் ஒரு பகுதி

## கலாசாரம்

லிச்டென்ஸ்டெய்ன் நாடானது, அந்நாட்டுக்கு வெளியே இருந்து வந்த கலாசார செல்வாக்கிற்கு பெருமளவு உட்பட்ட ஒரு நாடாகும். குறிப்பாக, தென் ஜேர்மனிய கலாசார தாக்கங்களுக்கும் மொழி ஆதிக்கத்திற்கும் பெரிதும் உட்பட்டுள்ளது. தவிர; ஒஸ்ட்ரியா, பவேரியா, பாடென் வூட்டம் போர்க், சுவிற்சர்லாந்து முதலிய பிராந்தியங்களின் கலாசார செல்வாக்குகளுக்கும் உட்பட்டுள்ளது.


தேசிய இலச்சினை

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2000): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 20,072; செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்: கணக்கிடப்படவில்லை. **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (1998): FM 4. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (1997): சுவிட்ஸர்லாந்து ஒளிபரப்புடனான இணைப்புச் சேவை. **இணையத்தள வழங்குனர்கள்** (2000): 44.

## போக்குவரத்து


லிச்டென்ஸ்டெய்ன் நாடாளுமன்றம்

**புகையிரதப் பாதைகள்** (2002): மொத்தம் 18.5 கி.மீற்றர்.
**பெருந்தெருக்கள்:** மொத்தம் 250 கி.மீற்றர்.



## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 25%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** கோதுமை, பார்லி, சோளம், கிழங்கு வகைகள், கால்நடைகள், பாற்பண்ணை உற்பத்திகள். **கைத்தொழில்கள்:** இலத்திரனியல் உபகரணங்கள், உலோக உற்பத்திகள், செரமிக் மட்பாண்டங்கள், மருந்து மற்றும் மருத்துவப்பொருட்கள், உணவு உற்பத்திப் பொருட்கள், சுற்றுலாத்துறை. **இயற்கை வளங்கள்:** நீர் மின்வலு, வளமான பயிர்ச்செய்கை நிலம். **ஏற்றுமதிகள்** (2008): சிறிய இயந்திரங்கள், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், பல் மருத்துவப்பொருட்கள், தயாரிக்கப்பட்ட உணவுப்பொருட்கள், இலத்திரனியல் உபகரணங்கள்.

**இறக்குமதிகள்** (2008): விவசாய உற்பத்திகள், மூலப்பொருட்கள், இயந்திரங்கள், உலோகப்பொருட்கள், புடவை வகைகள், உணவுப்பொருட்கள். மோட்டார் வாகனங்கள்.


லிச்டென்ஸ்டெய்ன் தேசிய அருங்காட்சியகம்

**முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): ஐரோப்பிய யூனியன் (ஜேர்மனி, ஒஸ்ட்ரியா, பிரான்ஸ், இத்தாலி, ஐக்கிய ராச்சியம்), ஐக்கிய அமெரிக்கா, சுவிற்சர்லாந்து.



## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

- வாடுஸ் கோட்டை
- குடன்பெர்க் கோட்டை
- லிச்டென்ஸ்டெய்ன் தேசிய அருங்காட்சியகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பிலிருந்து, கோட்டேயை நோக்கிச் சென்ற நாடாளுமன்றம்


புதிய நாடாளுமன்றத்தின் உட்புறத் தோற்றம்

காலிமுகத்திடலில் அமைந்திருந்த இலங்கையின் நாடாளுமன்றம், 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி ஸ்ரீ ஜயவர்தனபுரவில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் தனது நிர்வாக செயற்பாடுகளை ஆரம்பித்தது. 1982 மார்ச் மாதம் 26 ஆம் திகதி தனது பழைய இடமாகிய காலி முகத்திடலில் அமைந்திருந்த கட்டடத்தில் இறுதியாகக் கூடியது. அன்றைய தினம், வீடமைப்புப் பெருந்தெருக்கள் அமைச்சரும் பிரதம மந்திரியுமான ரணசிங்க பிரேமதாச நாடாளுமன்றத்தின் வரலாறு பற்றிப் பேசினார். இதனைத்தவிர, அன்றைய சாவகச்சேரி மக்கள் பிரதிநிதியாக இருந்த வி. என். நவரத்தினம், மதவாச்சி மக்கள் பிரதிநிதி மைத்திரிபால சேனாநாயக்கா, அப்போதைய கிராமிய அபிவிருத்தி அமைச்சர் எஸ். தொண்டமான் ஆகியோர் உரை நிகழ்த்தினர். மேலும், அக்காலகட்டத்தில் சபாநாயகராக இருந்த அல்ஹாஜ் எம்.ஏ.பாக்கிர் மாக்கர் இறுதியாக அங்கு உரை நிகழ்த்தினார்.


ஜயவர்தனபுர கோட்டேயில் அமைந்துள்ள தற்போதைய நாடாளுமன்றம்

## ஸ்ரீ ஜயவர்தனபுர நாடாளுமன்றக் கட்டடம்

காலிமுகத்திடலில் அமைந்த கட்டடம், ஆளுனர் ஹர்பட் ஸ்டென்ஸி என்பவரின் ஆலோசனையில் உருவானது போன்று, ஸ்ரீ ஜயவர்தனபுர நாடாளுமன்றக் கட்டடம் ரணசிங்க பிரேமதாச அவர்கள் வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது, அவரது ஆலோசனையின்படியே உருவானது. 'சகலவித வசதிகளுடன்கூடிய நாடாளுமன்றத் தொகுதி ஸ்ரீ ஜயவர்தனபுரவில் பொருத்தமான இடத்தில் நிறுவப்பட வேண்டும்' என 1979 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் திகதி இவர் காலிமுகத்திடல் நாடாளுமன்றத்தில் முன்வைத்த யோசனை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதன்படி, வரலாற்றுப் புகழ்வாய்ந்த ஜயவர்தனபுரக் கோட்டேயின் 'தியவன்னா' ஓயவிற்கு இடையில் அமைந்துள்ள பிரதேசம் புதிய நாடாளுமன்றம் அமைப்பதற்குத் தெரிவுசெய்யப்பட்டதுடன், அதனை நிர்மாணிக்கும் பொறுப்பு ஜப்பானிய நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி இதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. 1982 ஏப்ரல் 29 ஆம் திகதி புதிய நாடாளுமன்றத் திறப்பு விழா மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

காலிமுகத்திடலில் அமைக்கப்பட்ட கட்டடத்திலிருந்து பிரியாவிடை பெற்றுவந்த மக்கள் பிரதிநிதிகள், ஸ்ரீ ஜயவர்தனபுர கட்டடத் தொகுதியில் 29 ஆம் திகதியன்று முற்பகல் 10.28 இற்கு (சுப நேரம்) அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே. ஆர். ஜயவர்தன தலைமையில் நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஆரம்பித்தனர்.

கட்டட அமைப்பிலும் புதிய நிர்மாண அமைப்பிலும்கூடிய புதிய நாடாளுமன்றத் தொகுதியானது, பழைய நாடாளுமன்றத்தை விட முற்றிலும் மாறுபட்டுக் காணப்பட்டது.


முன்னாள் ஜனாதிபதி அமரர் ஆர்.பிரேமதாச

**ஜெய்கர்**

பழைய நாடாளுமன்றக் கட்டடம்



# இலங்கையின் முதலாவது சுதேச மகா தேசாதிபதி சேர். ஒலிவர் குணதிலக



திருகோணமலையில் தபால் நிலைய அதிபராகக் கடமையாற்றிய அல்பிரட் குணதிலக தம்பதிகளுக்கு 1892 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி ஒலிவர் குணதிலக பிறந்தார். இவர் கொழும்பு வெஸ்லி கல்லூரியில் கல்வி கற்றார். பின்னர் லண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று பீ.ஏ.பட்டம் பெற்றார். லண்டனிலிருந்து இலங்கை திரும்பிய சேர். ஒலிவர் குணதிலக 'டெய்லி நியூஸ்' பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தில் இணைந்து ஊடகத்துறைக்கு தமது பங்களிப்பை வழங்கினார். சிறிது காலத்தில் டெய்லி நியூஸ் பத்திரிகையிலிருந்து விலகி அரசாங்க சேவையில் தன்னை இணைத்துக் கொண்டார்.


The Times of Ceylon
FOUNDED IN 1846
THEY MUST ANSWER QUESTIONS
...azette ruling on coup leaders
CONSPIRACY AGAINST GOVT. ALLE...
Freedom Day revels in A'pura cancelled
DRUGS
...HON HOUSE

இவருக்கு அரசாங்க சேவையில் இலங்கை புகையிரதப் பகுதியின் உதவிக் கணக்குப் பரிசோதகராக கடமையாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. இப்பதவியைப் பயன்படுத்தி தனது கடுமையான உழைப்பையும் பெரும் செயற்றிறனையும் வெளிக்காட்டினார். அதன் பயனாக, 1924 ஆம் ஆண்டில் உதவிக் குடியேற்ற நாட்டுக் கணக்குப் பரிசோதகராக நியமனம் செய்யப்பட்டார். அதே ஆண்டு ஜுலை மாதம் இவர், இலங்கையின் பிரதம கணக்காளராகவும் நியமிக்கப்பட்டார். இப்பதவியை சேர்.ஒலிவர் குணதிலக 1942 ஆம் ஆண்டுவரை வகித்து வந்தார்.



1942 இல் இரண்டாம் உலக யுத்தத்தின் ஆரம்ப கட்டமாக ஜப்பானில் யுத்தம் ஆரம்பித்த காலப்பகுதியில் இலங்கையின் பொதுமக்கள் பாதுகாப்பு அதிகாரியாகவும் உணவுப் பொருள் அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார். இப்பதவிகளின்மூலமாக, யுத்தகால வேளையில் இலங்கை மக்களுக்கும் ஏனைய நேச நாடுகளுக்கும் செய்த சேவையை ஆங்கிலேயர் பாராட்டினர். பொதுசன பாதுகாப்புக்காக, சேர்.ஒலிவர் குணதிலக மேற்கொண்ட நடவடிக்கைகளையும் யுத்தகாலத்தில் நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படாது இருக்க துணிச்சலுடன் செயற்பட்டமைக்காகவும் ஆங்கில ஆட்சியினரால் 1944 ஆம் ஆண்டில் சேர். ஒலிவர் குணதிலகவிற்கு 'நைட் கொமாண்டர்' என்ற சேர் பட்டம் வழங்கப்பட்டது.

இரண்டாம் உலக யுத்தம் நிறைவை எட்டியதும் சேர்.ஒலிவர் குணதிலக நிதிக்காரியதரிசியாக நியமிக்கப்பட்டார். நிதிக் காரியதரிசியாக நியமனம் செய்யப்பட்ட முதலாவது இலங்கையர் சேர்.ஒலிவர் குணதிலகவேயாவார். இவ்வாறு பல்வேறு வகையில் பதவிகளைப் பெற்று இவர் சாதனை படைத்ததுடன், இந்நாட்டின் சுதந்திரத்திற்காக துணிச்சலுடன் செயற்பட்டார். 1947 இல் சோல்பரி அரசியல் திட்டம் நடைமுறைக்கு வந்ததும் இந்நாட்டின் அரசியல் அரங்கிலும் பிரகாசிக்கத் தொடங்கினார். அரச பதவியை விட்டு விலகி மேற்சபை அங்கத்தவரானதோடு, உள்நாட்டு அமைச்சராகவும் பதவி வகித்தார். பின்னர், 1948 இல் பிரித்தானிய நாட்டின் இலங்கைத் தூதுவராகச் சென்றார். மீண்டும் இலங்கை வந்து மேற்சபையின் முதல்வராகத் தெரிவானார்.

1954 இல் சேர். ஜோன் கொத்தலாவல பிரதமராகப் பதவி ஏற்றதும் சேர்.ஒலிவர் குணதிலக நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார். இவர் மிகவும் சாதாரண குடும்பத்தில் பிறந்து தனது முயற்சியினால் சிறிது, சிறிதாக உயர்ந்து உயர் பதவியை எட்டி 1955 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 17 ஆம் திகதி முதல் இலங்கையின் 'மகா தேசாதிபதி' என்ற உயர் பதவியைப் பெற்றார். சேர். ஒலிவர் குணதிலகவே இலங்கையின் முதலாவது சுதேச மகா தேசாதிபதி என்ற கௌரவத்தையும் பெற்றார். அத்துடன், கொழும்பு கோட்டேயின் ராணி மாளிகையில் வசித்த பெருமையும் சேர்.ஒலிவர் குணதிலக அவர்களுக்கே கிடைத்தது. சிறந்த குணநலனும் பரந்த அனுபவமும் பெற்ற சேர். ஒலிவர் குணதிலக 1962 ஆம் ஆண்டு மார்ச் 02 ஆம் திகதி தமது பதவியிலிருந்து ஓய்வுபெற்றுக் கொண்டார். இவர் 1978 டிசம்பர் 17 ஆம் திகதி காலமானார்.

**கே.பி.பி. புஷ்பராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வினாத்தாள் - I (கடந்தவாரத் தொடர்ச்சி)

பெயர்: .................................................... நேரம்: 45 நிமிடங்கள்

25) பின்வரும் உருவை வெட்டுவதற்கு ஒரு சதுரக் கடதாசியை எத்தனை தடவைகள் மடிக்க வேண்டும்? என்பதைக் காட்டும் சரியான விடையின்கீழ்க் கோடிடுக.

 ⟶ 1. 3   2. 4   3. 2

26) இவ்வுருவிலுள்ள செவ்வகங்களின் எண்ணிக்கை யாது?



1. 13   2. 10   3. 15

27) பின்வரும் எந்த இரு துண்டுகளை இணைப்பதன்மூலம் சதுரம் ஒன்றை ஆக்க முடியும்? அவ்விரு எழுத்துக்களும் உள்ள விடையைத் தெரிவுசெய்க.




1. B,E   2. B,D   3. A,C

★ *28 முதல் 29 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் முதலில் தரப்பட்டுள்ள கூற்று பிழையானது ஆகும். அந்தக் கூற்று ஏன் பிழையானது? என்பதைக் குறிக்கும் விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.*

28) கிழக்குத் திசையில் சூரியன் மறையும்போது, வானம் அழகுடன் பிரகாசிக்கும்.

1. ஆகாயம் ஒருபோதும் பிரகாசிக்க மாட்டாது.
2. சூரியன் கிழக்குத் திசையில் மறைய மாட்டாது.
3. சூரியன் உதிக்கும்போது, வானம் அழகுடன் பிரகாசிக்காது.

29) காலைநேரத்தில் மலர்ந்த பவளமல்லிகைப் பூக்கள் மணம் வீசின.

1. பவளமல்லிகைப் பூக்கள் மணம் வீசா.
2. பவளமல்லிகைப் பூக்கள் காலை நேரத்தில் மலர மாட்டா.
3. பவளமல்லிகைப் பூக்கள் வெள்ளை நிறம் உடையதல்ல.

30) பழங்கள், வாழைப்பழம், மரக்கறி, உணவு என்பவற்றுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுவதற்குப் பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது. இந்த உருவில் பழங்களைக் காட்டும் எழுத்து யாது?




1. H   2. T   3. S

31) நான்கு பிள்ளைகளின் பிறந்ததினங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கமலா - 2001.11.26
ரமணி - 2001.12.24
சாந்தி - 2001.12.03
விமலா - 2001.11.05

✱ இதன்படி பின்வரும் கூற்றுக்களில் பிழையானது எது?

1. கமலா சாந்தியிலும் மூத்தவள்.
2. விமலா ரமணியிலும் மூத்தவள்.
3. கமலா விமலாவிலும் மூத்தவள்.

32) எனது கடிகாரம் சரியான நேரத்தைவிட, 10 நிமிடங்கள் முந்திக் காட்டும். எனது நண்பனின் கடிகாரம் எனது கடிகாரத்தைவிடவும் 10 நிமிடங்கள் பிந்திக் காட்டும். சரியான நேரம் பிற்பகல் 2.00 மணி எனின், எனது நண்பனின் கடிகாரம் காட்டும் நேரம் யாது?

1. பிற்பகல் 1.50   2. பிற்பகல் 2.00   3. பிற்பகல் 2.10

33) தரப்பட்டுள்ள எண் கோலத்தில் A , B ஆகியவற்றுக்குப் பொருத்தமான எண்கள் முறையே;



1. 3உம் 6 உம்
2. 9 உம் 3 உம்
3. 3உம் 9உம்

★ *34 ஆம், 35 ஆம் வினாக்களுக்குத் தரப்பட்ட பந்தியை வாசித்து உருக்களில் காட்டப்பட்டுள்ள இடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.*

> காலையில் தனது  பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த முரளி வழியில் தனது நண்பனைச் சந்தித்தான். அவனையும் ஏற்றிக்கொண்டு முரளி விரைவாகச் சென்றுகொண்டிருந்தபோது, வழியில் நின்ற  குறுக்கே சென்றதால் இருவரும் வீதியில் வீழ்ந்தனர்.

34)  இவ்வுருவை குறித்து நிற்கும் சொற்கள்;

1. துவிச்சக்கர வண்டியுடன்   2. துவிச்சக்கர வண்டி   3. துவிச்சக்கர வண்டியில்

35)  இவ்வுரு குறித்து நிற்கும் சொல்;

1. நாய்   2. நாய்களுக்கு   3. நாய்க்கு

36) இன்று வெள்ளிக்கிழமை. நாளை மறுநாள் 20 ஆம் திகதி. சென்ற வெள்ளிக்கிழமை எத்தனையாம் திகதி?

1. 12 ஆம் திகதி   2. 11 ஆம் திகதி   3. 18 ஆம் திகதி

37) பாடசாலை விளையாட்டு மைதானத்தில் 35 இல் இருந்து 45 வரையிலான எண்கள் பொறிக்கப்பட்ட மேலங்கியுடன் விளையாட்டு வீரர்கள் நின்றனர். மைதானத்திலிருந்த விளையாட்டு வீரர்கள் எத்தனை பேர்?

1. 11   2. 12   3. 10

38) உருவில் தடித்த கோடுகளினால் காட்டப்பட்ட மூன்று பாதைகளிலும் நீளம் கூடுதலாகக் காணப்படுவது;




1. C இற்கும் D இற்கும் இடையே
2. E இற்கும் F இற்கும் இடையே
3. A இற்கும் B இற்கும் இடையே

★ *39 ஆம், 40 ஆம் வினாக்களுக்கு புள்ளிக்கோட்டில் விடை எழுதுக.*

39) பல்வேறு நிறங்கள் தீட்டப்பட்டுள்ள மரச்சதுரமுகி ஒன்றின் இரு நிலைகள் கீழே காட்டப்படுகின்றன.




✱ இச்சதுரமுகியில் நீல நிறம் பூசப்பட்ட பக்கத்துக்கு எதிரான பக்கம் யாது? ....................

40)  தரப்பட்டுள்ள உருவை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது? ....................................

## வினாத்தாள் -I இற்கான விடைகள்

*(ஜூலை 4,11 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 2 | 11) | 3 | 21) | 2 | 31) | 3 |
| 02) | 3 | 12) | 2 | 22) | 2 | 32) | 2 |
| 03) | 3 | 13) | 1 | 23) | 3 | 33) | 2 |
| 04) | 2 | 14) | 3 | 24) | 2 | 34) | 3 |
| 05) | 2 | 15) | 2 | 25) | 1 | 35) | 1 |
| 06) | 2 | 16) | 1 | 26) | 3 | 36) | 2 |
| 07) | 3 | 17) | 2 | 27) | 3 | 37) | 1 |
| 08) | 2 | 18) | 3 | 28) | 2 | 38) | 2 |
| 09) | 3 | 19) | 1 | 29) | 2 | 39) | சிவப்பு |
| 10) | 2 | 20) | 1 | 30) | 2 | 40) | 26 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எமது உடல் பற்றிய வியப்பான தகவல்கள்

## குருதி



* வயது வந்த ஆரோக்கிய ஆணொருவரின் உடலில் 5 லீற்றர் குருதி உள்ளடங்கியுள்ளது.
* வயது வந்த ஆரோக்கியமான பெண்ணொருவரின் உடலில் 4.3 லீற்றர் குருதி உள்ளடங்கியுள்ளது.
* இந்தக் குருதியில் செங்குருதியணுக்கள் 25,000,000,000 முதல் 30,000,000,000 வரையில் அடங்கியிருக்கும்.
* குருதி நாளத்தினுள் 100,000 கி.மீற்றர் தூரத்திற்கு குருதி பயணிக்கின்றது. இது புவி தனது அச்சினை சுற்றி 2.5 சுற்றுக்கள் பயணிப்பதற்கு சமமான செயற்பாடாகும்.
* குருதியணுவொன்றின் ஆயுட்காலம் 120 நாட்கள் மட்டுமே!
* மனிதன் தன் வாழ்நாளில் 0.5 தொன் நிறை கொண்ட குருதியணுக்களை உற்பத்தி செய்கின்றான்.
* ஒவ்வொரு செக்கனுக்கும் எமது உடலினுள் குருதியணுக்கள் 1,200,000 முதல் 2,000,000 வரை உற்பத்தியாகின்றன.
* செங்குருதியணுக்கள் உற்பத்திக்கும் அழிவுக்கும் இடையிலுள்ள விகிதம் செக்கனுக்கு 2:3 மில்லியன் என்பதாகும்.

## மூளையின் பலம்

ஒவ்வொரு நாளும் உங்கள் மூளையினுள் 100,000 உயிரணுக்கள் இழக்கப்படுகின்றன. ஆனால், அதிர்ஷ்டவசமாக, மூளையில் உங்களுக்கு நூறு பில்லியன் அளவில் உயிரணுக்கள் உள்ளன. உங்கள் மூளையினுள் உள்ளடங்கியுள்ள உயிரணுக்களின் மேற்பகுதி அளவு 2,090 சதுர செ.மீற்றர் ஆகும்.

## உட்சுவாசம், வெளிச்சுவாசம்

மனிதன் ஒரு செக்கனில் ஆறு லீற்றர் வளியையும் ஒரு நாளில் மட்டும் 8,640 லீற்றர் வளியையும் உட்சுவாசிக்கின்றான். எமது மனதில் அச்சம் அல்லது அதிர்ச்சி ஏற்படும்போது, ஒரு நிமிடத்தில் 13-17 இலிருந்து 80 தடவைகள் உட்சுவாசம் மற்றும் வெளிச்சுவாச செயற்பாடுகள் நிகழ்கின்றன. ஆனால், சாதாரண வேளைகளில் ஒரு நிமிடத்திற்கு 20 தடவைகள் என்ற ரீதியில் உட்சுவாச மற்றும் வெளிச்சுவாச செயற்பாடுகள் நிகழுகின்றன. அதற்கமைய, எம்மில் ஒரு நாளில் 28,800 தடவைகள் உட்சுவாச மற்றும் வெளிச்சுவாச செயற்பாடுகள் நிகழ்கின்றன.

## கலன்கள்

எமது உடலில் 50 ட்ரில்லியன் அளவில் கலன்கள் (உயிரணுக்கள்-Cell) உள்ளடங்கியுள்ளன. ஒவ்வொரு நிமிடத்திற்கு ஒரு தடவை இந்த கலன்களில் 3 பில்லியன் அளவிலானவை இறந்துவிடுகின்றன. இதன்படி, ஒரு நாளில் மட்டும் 4,320,000,000,000 கலன்கள் அழிந்துவிடுகின்றன. அதற்குப் பதிலாக புதிய கலன்கள் உற்பத்தியாகின்றன. ஒவ்வொரு நாளும் எமது உடலினுள் வெண்குருதியணுக்கள் 10 பில்லியன் வரை உற்பத்தியாகின்றன. ஏதாவதொரு நோய்க்கிருமி எமது உடலைத் தாக்கும்போது, அதனை எதிர்த்துப் போராடும் வகையில் ஒரு பாதுகாப்புக் கவசமாக இந்த வெண்குருதியணுக்கள் செயற்படுகின்றன.

## சமிபாட்டுத் தொகுதி

ஒரு நாளில் மட்டும் எமது இரைப்பை 2 லீற்றர் 'ஹைட்ரோக்ளோரிக்' அமிலத்தினை உற்பத்தி செய்கின்றது. இந்த அமிலம் ஓர் உலோகத்தினைக் கரைக்கும் அளவுக்கு மிகவும் காரசாரமானது. ஆனால், இரைப்பைச் சுவர்களை இந்த அமிலத்தினால் எதுவும் செய்துவிட முடியாது. இதற்குக் காரணம்: இரைப்பைச் சுவர்களில் ஒரு நிமிடத்திற்கு 500,000 வரையிலான இரைப்பைக் கலன்கள் உற்பத்தியாவதே ஆகும்.

எமது சிறுகுடல் 5 மீற்றர் நீளம் கொண்டது. இது எமது உணவுச் சமிபாட்டு தொகுதியில் உள்ள நீளமான பகுதியாகும். பெருங்குடல் அளவில் பெரியதாயினும் அதன் நீளம் 1.5 மீற்றர் மட்டுமே!

## ரசாயனப் பொருட்கள்

900 பென்சில்களைத் தயாரிக்கத் தேவையான காபன் எமது உடலில் அடங்கியுள்ளது. அத்துடன், எமது உடலில் உள்ள 'பொஸ்பரஸ்' அளவானது, 200 தீக்குச்சிகளைத் தயாரிக்கப் போதுமானதாகும். அவ்வாறே, எமது உடலில் அடங்கியுள்ள இரும்பின் அளவானது, 7.5 செ.மீற்றர் நீளம்கொண்ட ஆணியொன்றைத் தயாரிக்கப் போதுமானது.



## தலைமயிர்

ஒருநாளில் மட்டும் எமது தலைமயிர் 0.5 மி.மீ நீளத்திற்கு வளரும்.

## கண்

நாம் ஒரு நாளில் மட்டும் 20,000 தடவைகள் கண்களை மூடித்திறக்கின்றோம்.

## மூக்கு

மூக்கின் சுவாச மற்றும் புலன் உணர்வு வேகம் மணித்தியாலத்திற்கு 160 கி.மீற்றர் ஆகும். இது புகையிரதமொன்றின் வேகத்தினைவிட அதிகமானதாகும்.

## வாய்

ஒருவரின் வாழ்நாளில், வாயில் உள்ள சுரப்பிகள் 37,800 லீற்றர் உமிழ்நீரைச் சுரக்கின்றன.

## இருதயம்

எமது இருதயம் ஒரு நாளில் உடலுக்குள் பாய்ச்சும் குருதியின் அளவு 13,640 லீற்றராகும். இந்த அளவானது 40,000 நீர் அருந்தும் தகரப் பேணிகளை நிரப்பப் போதுமானது. பொதுவாக, ஒரு நிமிடத்தில் 70 தடவைகள் இதயத்துடிப்பு நிகழ்வதுடன், நாளாந்தம் 100,000 தடவைகள் இருதயம் துடிக்கின்றது.

## நகங்கள்

எமது கைகளில் உள்ள நகங்கள் ஒரு வாரத்தில் மட்டும் 0.05 செ.மீற்றர் நீளத்திற்கு வளர்கின்றன. இது ஒரு வாரத்தில் கால்நகங்கள் வளரும் அளவினைவிட, நான்கு மடங்கு அதிகமாகும்.

## நரம்புகள்

எமது உடலில் 13,000,000,000,000 நரம்புகள் உள்ளடங்கியுள்ளன.

## சிறுநீர்

ஒரு நாளில் மட்டும் நபர் ஒருவர் வெளியேற்றும் சிறுநீரின் அளவு 400 முதல் 2,000 மி. லீற்றர் ஆகும். வயது, உடல், நிறை, சுற்றுப்புறச்சூழல் வெப்பநிலை என்பன இந்த விடயத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

## தோல்

எமது உடலை மூடியிருக்கும் தோலின் எடை 4 கிலோ கிராம்களாகும். உடை அணியும்போதும் உடைமாற்றும்போதும் சுவாசிக்கும்போதும் தோலைச் சொறியும்போதும் எமது மேற்தோல் அப்புறப்படுத்தப்படுகின்றது. இவ்வாறு ஒரு நிமிடத்தில் மட்டும் 50,000 அளவிலான மேற்தோல் கழன்றுவிடுகின்றது. வாழ்நாளில் 18 கி.கி.நிறைகொண்ட இறந்த மேற்தோல் பகுதிகள் உடலில் இருந்து நீக்கப்படுகின்றன.

(இ)

## வளி

மனித உடலில் நாளாந்தம் 2 லீற்றர் வளி உற்பத்தியாகின்றது.

## வியர்வை

மனித உடலில் உள்ள 300,000 வியர்வைச் சுரப்பிகள் நாளாந்தம் 0.5 லீற்றர் நீரை வியர்வையாக வெளியேற்றுகின்றன. வெப்பம் அதிகமுள்ள நாட்களில் 13.3 லீற்றர் நீர் வியர்வையாக வெளியேற்றப்படுகின்றது.

## உறக்கம்

நாளாந்தம் நபர் ஒருவர் $7^{1/2}$ மணித்தியாலங்கள் உறங்கினால், அந்த உறக்கத்தில் 60 சதவீதம் அரைத்தூக்கமாகவும் 18 சதவீதம் ஆழ்ந்த தூக்கமாகவும் 20 சதவீதம் கனவு காணும் தூக்கமாகவும் அமையும்.



**சீரான உடல் இயக்கம் சுகமான வாழ்வைத் தரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கின்னஸ் புத்தகத்தில் பெயர் பதிக்கக்கூடிய

உலகப் புகழ்பெற்ற விடயங்களைத் தன்னில் பதிந்துகொள்ளும் கின்னஸ் சாதனைப் புத்தகத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒவ்வொரு வருடமும் புதிய புதிய சாதனைகள் அதில் பதியப்படுகின்றன. எனினும், இவ்வாறு பதியப்படுகின்றவை யாவும் இப்பூமியில் அதாவது, உலக எல்லைக்குள் நடந்தவை மாத்திரமே! ஆனால், அதனைத் தவிர்த்து புவிக்கு வெளியே அதாவது, உலக எல்லையைத் தாண்டி அமைந்துள்ள சாதனைகளை கின்னஸ் புத்தகத்தில் சேர்த்தால் எப்படி இருக்கும்? இதோ, இந்தக் கோள்களின் பெயர்களைத்தான் அங்கு பதிய வேண்டிவரும். ஆக, எமது வானியலாளர்கள் கோள்களைப் பற்றி ஆராய்ந்து-அறியப்படுத்தியுள்ள விடயங்களைக் கொண்டு கின்னஸ் புத்தகத்தில் பெயர் பதிக்கக்கூடிய கோள்கள் பற்றி சற்று நோக்குவோம்

## வேகம்கூடிய கோள்



'ஸ்வீப்ஸ்-10' எனும் கோள் தனது தாய் நட்சத்திரத்தை (சூரியனை) ஒரு முறை சுற்றிவர 10 மணித்தியாலங்கள் மாத்திரமே எடுக்கிறது.

பிரபஞ்சத்திலேயே, மிகவும் வேகமான கோள் ஒன்று புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதுதான் 'ஸ்வீப்ஸ்-10' (Sweeps-10) எனும் கோளாகும். இது தன்னைச் சார்ந்த சூரியனை 740,000 மைல் தூரத்தில் இருந்து சுற்றி வருகின்றது. இது நமது புவிக்கும் சந்திரனுக்கும் இடையில் உள்ள தூரத்தைவிட, மூன்று மடங்கு அதிகமாகும். இந்தக் கோள் தனது சூரிய[illegible]ச் சுற்றி ஒருமுறை [illegible] வர அதாவது, ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்ய, எமது நேரப்படி வெறும் 10 மணித்தியாலங்கள் மாத்திரமே செல்கின்றன.

## வயோதிபக் கோள்



இது எமது புவியின் தோற்றமாகும். உயிரினங்களின் இருப்புக்கு உகந்ததென சாதனை படைத்துள்ள கோளாக புவி கருதப்படுகின்றது.

'மெதுசெலா' (Methusela) எனும் கோள்தான் பிரபஞ்சத்தில் இதுவரை இனங்காணப்பட்டுள்ள வயோதிபக் கோளாகக் கருதப்படுகின்றது. இதன் விஞ்ஞானப் பெயர் 'பி எஸ் ஆர் பி 1602026 B' (PSR B 162026B) என்பதாகும். இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள கோள்களில் இதுவே மிகவும் பழமையானது. அதாவது, இப்பிரபஞ்சத்தில் உள்ள மூதாதைக் கோளாக இதனைக் குறிப்பிடலாம். தற்போது இதன் வயது 12.7 பில்லியன் வருடங்களாகும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எமது பூமியைவிட, எட்டு பில்லியன் வருடங்களுக்கும் அதிகமான வயோதிபக் கோளாக இது கருதப்படுகின்றது.

பிரபஞ்சத்தில் 'பிக்பேன்' எனும் பாரிய வெடிப்பு நிகழ்ந்து இரண்டு பில்லியன் வருடங்களின் பின்னரே, மெதுசெலா கோள் தோன்றியது. 1993 இல் இக்கிரகம் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, இது குறித்து அதுவரை நிலவி வந்த கருத்துக்களில் மாற்றங்கள் ஏற்பட்டன.

எனினும், இதைவிட அதிக வயதான கோள்கள் சிலவற்றை எதிர்காலத்தில் காணக்கூடியதாக இருக்கும் என வானியலாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

அவ்வாறு நிகழுமாயின், பிரபஞ்சத்தில் உயிரினங்களின் இருப்புக் குறித்த கருத்துக்களிலும் மாற்றங்கள் நிகழலாம். இதுவரை காலமும் நாம் எண்ணியிருந்தது போன்றோ அல்லது அதற்கு முன்னரோ உயிரினங்கள் இப்பிரபஞ்சத்தில் தோன்றியிருக்கலாம் என இப்பொழுது கருதப்படுகின்றது. விண்வெளியை அவதானிக்கும் திறனில் பெரும் முன்னேற்றம் கண்டுள்ள தற்போதைய நிலையில், இது குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.



## பாரிய, அடர்த்தி குறைந்த மற்றும் மென்மையான கோள்



'டிஆர்ஈஎஸ் 4' (TRES-4) என்பது விண்வெளியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிகப் பெரிய கிரகமாகும். இது அடர்த்தியில் மிகக் குறைந்தது. புவியிலிருந்து 1,400 ஒளி வருடங்கள் தொலைவில் இது அமைந்துள்ளது.

இப்பிரபஞ்சத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட கோள்களில் மிகப் பெரியது 'டி ஆர் ஈ எஸ் 4' (TRES-4) எனும் இந்தக் கோளாகும். இது எமது ஞாயிற்றுத் தொகுதியின் மிகப்பெரிய கோளாகிய வியாழனைவிட 1.7 மடங்கு பெரியது. மிகவும் அடர்த்தி குறைந்த கோளும் இதுவாகும். எடை குறைந்த மென்மையான கோளாக இது குறிக்கப்படுகின்றது. 'டி ஆர் ஈ எஸ்- 4' கோளானது, சூரியனை வலம் வருகையில், அதன் வளிமண்டலத்தின் ஒரு பகுதி வால்நட்சத்திரத்தின் வாலைப் போன்று பின்னே இழுத்துச் செல்லப்படுவதாக அமெரிக்காவின் லாவெல் கோள்மண்டல அவதானிப்பு நிலையத்தைச் சேர்ந்த ஜோர்ஜி மென்டு ஷேவ் என்பவர் தெரிவிக்கின்றார். இவர், இது குறித்து பல அரிய கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இக்கிரகத்தின் அடர்த்தியானது 0.2 கிராம் கன சென்ரிமீற்றர் என அவர் மேலும் கூறியுள்ளார்.

## அதிவிசேடமான கோளொன்று!

'எப்சிலோன் எரிடானி-பி' (Epsilon Eridani-b) என அழைக்கப்படும் இந்தக் கோளானது, விண்வெளிச் சுற்றுப்பாதையில் 'எப்சிலோன் எரிடானி' எனும் நட்சத்திரத்துடனேயே நிலைகொண்டுள்ளது. இந்த நட்சத்திரமானது, எரிடானுஸ் எனும் பெயர் கொண்ட நட்சத்திரத் தொகுதியைச் சேர்ந்தது. இக்கோளானது, ஏனையகோள்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டும் வகையில் விசேட லட்சணங்கள் எதையும் கொண்டிராதபோதும், இது குறித்து பல விசேட தகவல்களைப் பெறக்கூடியதாக இருக்கின்றது. அதாவது, இந்தக் கோள் புவிக்கு மிக அருகில் அதாவது, 10.8 ஒளிவருடங்கள் தூரத்தில் அமைந்திருப்பதால், மிக விரைவில் அதிக தொழில்நுட்பம்மூலம் உருவாக்கப்படவுள்ள தொலைநோக்கியைக்கொண்டு இதனைப் பார்வையிட வாய்ப்புகள் கிடைக்கும்.

இந்தக் கோளுக்குரிய சூரியன் வெகுதொலைவில் இருப்பதால், இதில் சமுத்திரமோ அல்லது வேறு நீர்நிலைகளோ இருக்கும் பட்சத்தில், அவை பனி உறைந்த அதி குளிர் பிரதேசமாகவே இருக்கும். எனவே, அங்கு உயிரினங்கள் வாழக்கூடிய வாய்ப்புகள் மிகவும் அரிதாகவே காணப்படும். எனினும், அதன் சூரிய மண்டலத்திற்குட்பட்ட வேறு கோள்களில் உயிரினங்கள் வாழ வாய்ப்புகள் இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோள்கள்

## மிகக் குறைந்த வயதுடைய பெயர் சூட்டப்படாத கோள்





இன்னும் பெயர் வைக்கப்படாத மிகவும் குறைந்த வயதுடையகோள். 'கொக்கு டவு' எனும் நட்சத்திரத்தை வலம் வருகின்றது. இது மில்லியன் வருடங்களிலும் குறைவான வயதை உடையது.

தற்போதளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிக இளமையான இந்தக் கிரகமானது, மில்லியன் வருடங்களிலும் குறைந்த வயதை உடையது. இக்கிரகத்திற்கு இதுவரை பெயர் சூட்டப்படவில்லை. பூமியிலிருந்து 420 ஒளி வருடங்கள் தொலைவில் அமைந்துள்ள 'கொக்கு டவு' (Coku Tau) எனும் நட்சத்திரத்தையே இக்கோள் வலம் வருகின்றது.



இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட கோள்களில் மிகவும் பழமைவாய்ந்த கோள்தான் மெதுசெலா. இது 12.7 பில்லியன் வருடங்களாக இப்பிரபஞ்சத்தில் நிலைகொண்டுள்ளது.



## மிகச் சிறிய கோள்





மிகச் சிறிய கோளாகக் கருதப்படும் 'கெப்லர்-10 பி' (Kepler-10B), 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதுதான் எமது ஞாயிற்றுத் தொகுதிக்கு வெளியே கண்டுபிடிக்கப்பட்ட கோள்களில் மிகச் சிறிய கோள். 'கெப்லர்-10பி' (Kepler-10B) என அழைக்கப்படும் இந்தக் கோளானது, எமது புவியைவிட 1.4 மடங்கு பெரியது.

புவியிலிருந்து 560 ஒளி வருடங்கள் தூரத்தில் இது அமைந்துள்ளது. இக்கோள் குறித்து முதன்முதலாக 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் உலகிற்கு வெளியிடப்பட்டது.

சூரியனுக்கு மிக அருகிலுள்ள அதிக வெப்பமுள்ள வலயத்திற்கும் சூரியனில் இருந்து வெகு தொலைவில் உள்ள கடுங்குளிர் நிலவும் வலயத்திற்கும் இடையில் உள்ள மத்திய வலயத்தினை 'அதிர்ஷ்டமான வலயம்' என அழைப்பர். இது உயிர் வாழ்க்கைக்கு மிக இதமானது. இப்பகுதியில் உயிரினங்கள் வாழ முடியும். அதற்கமைய, இப்புதுக் கிரகமும் அத்தகைய உயிரினங்கள் வாழக்கூடிய அதிர்ஷ்டமான வலயத்திலேயே அமைந்துள்ளது. இதனை சாதனைமிக்க கண்டுபிடிப்பாகக் கருதும் நாஸா நிறுவனம், இங்கு உயிரினங்கள் இருக்கிறதா? என்பதைக் கண்டறியும் நோக்கில் ஆய்வுகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.



'எப்சிலோன் எரிடானி-பி'(Epsilon Eridani-b) என அழைக்கப்படும் கோளானது, 10 ஒளிவருடங்கள் தொலைவில் அமைந்துள்ளது. இதனை இன்னும் சிறிது காலத்தில் விண்வெளியை ஊடுருவிப் பார்க்கக்கூடிய நுணுக்கமான தொலைநோக்கிமூலம் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் எமக்குக் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## அதிக வெப்பமான கோள்





அதிக வெப்பமான கோள் 'டபிள்யு ஏ எஸ் பி - 12 பி' (WASP-12B) என அழைக்கப்படுகின்றது. இங்கு நிலவும் வெப்பநிலை 2,200°C நெருங்குகிறது.

இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட அதி வெப்பமான கோள் 'டபிள்யு ஏ எஸ்-12பி' (WASP-12B) ஆகும். இதன் மேற்பரப்பின் வெப்பமானது, 2,200°C என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் பரப்பளவானது, எமது வியாழனைப் போல் இரு மடங்காகும்.

## கடுங்குளிர் நிலவும் கோள்



இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட கோள்களில் கடுங்குளிரான கோளாக 'ஒஜிஎல்ஈபிஎல்ஜி-390LB' (OGLEBLG-390L) கருதப்படுகின்றது. இது எமது புவியைவிட, ஐந்து மடங்கு பெரியது. இதன் மேற்பரப்பில் பாறைகள் நிறைந்திருப்பதாகக் கருதப்படுகின்றது. இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட கோள்களில் இதுவே வெகு தொலைவில் (அதாவது, 28000 ஒளி வருடங்கள்) அமைந்துள்ளது. இதன் மேற்பரப்பில் 220°C வெப்பநிலை நிலவுகின்றது.



பிரபஞ்சத்தில் உள்ள கடுங்குளிர் நிலவும் கோளாக 'ஒஜிஎல்ஈபிஎல்ஜி- 390 LB'(OGLEBLG-390LB) திகழ்கின்றது.

**இரஞ்சித் ஜெயகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றால் ஏற்படும் பயன்கள்

வரலாறு என்பது, இறந்த காலத்தைக்கற்று, நிகழ்காலத்தை வளப்படுத்தி, எதிர்காலத்தை திட்டமிடலாகும். நாம் வரலாற்றைக் கற்பதால் பல பயன்களைப் பெறலாம். அந்தவகையில்,




நோக்குகின்ற, வரலாறு பல இறந்தகால அனுபவங்களைப் போதிக்கின்றது. இதனால், நிகழ்காலத்தில் வாழ்கின்ற மனிதனுக்கு சரியான முடிவுகளை எடுப்பதற்கு உதவியாக அமைகின்றது. மேலும், வரலாறு மனிதனின் ஆளுமைப் பண்புகளை வளர்க்க உதவுவதோடு, நாட்டுப் பற்றையும், உயரிய கலாசாரங்களையும் நம்முள் விதைக்கின்றது. அதுமட்டுமன்றி; சேர். பிரான்ஸிஸ் பைகன் என்பவர், "வரலாறு ஒரு பாடமாக அமைந்து மனிதனைப் புத்திசாலியாகவும் மாற்றுகின்றது" என்கிறார்.

அத்துடன், மனித வரலாறானது, மிகவும் தொன்மையானது. இது பல சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டதால் தான் நெப்போலியனின் வரலாறு தத்துவவியலாகவும் உளவியலாகவும் பயன்பட்டது. எனவே, நாம் வரலாற்றை தெளிவுறக் கற்பதால் நாட்டின் முக்கிய பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளவும், அவற்றுக்கான பின்னணியை உணர்ந்து, எம்மால் தேசிய உணவுடன் செயற்படவும் முடியும். அப்பொழுதுதான் நாடும் எழுச்சிபெற்று, வாழ்வும் வளர்ச்சிபெறும்!

**நுஸ்கியா கலீல்,**
**பாத்திமா, பா.ம.வித்., கெலிஓயா.**

## அஞ்சல் அட்டை




அன்பு தம்பி தங்கைகளே
அதிசய செய்தி கேட்பீரே!

மக்கள் சேவை செய்வதிலே
மனதில் மகிழ்ச்சி அடைகின்றேன்!

முத்திரை ஓங்கி அடித்தாலும்
முகத்தைச் சுளிக்க மாட்டேனே!

திங்கள் எழுதும் செய்திகளை
நினைத்த இடத்தில் சேர்த்திடுவேன்!

குடிசை மாளிகை என்கின்ற
பேதம் எதும் எனக்கில்லை!

ஏழை எளியோர் பயனடைய
எனது பயணம் தொடர்கிறதே!

அஞ்சல் அட்டை என் பெயராம்
அனைவரிடமும் பெறுவேன்
நற்பெயராம்!

## வரலாற்றுடன் தொடர்புடைய அம்சங்கள்

1. மின்னேரியாக் குளத்துக்கு எக்கால்வாய் ஊடாக நீர் திருப்பப்பட்டது?
   எலஹெர கால்வாய் ஊடாக
2. வரலாற்றின் பிதாவாக கருதப்படுபவர் யார்?
   ஹீரோடோடஸ்
3. மகாவம்சத்தின் இரண்டாம் பகுதி எது?
   சூளவம்சம்
4. 3000 வருட தொடர்ச்சியான எழுத்து மூலாதாரம் எது?
   மகாவம்சம்
5. சீகிரிய ஓவியத்தை வரைந்தவர் யார்?
   காசியப்பன்
6. யாழ் கோட்டை யாரால் கட்டப்பட்டது?
   ஒல்லாந்தரால்
7. சங்கிலிய மன்னனின் சிலை காணப்படும் இடம் எது?
   யாழ் நல்லூர்
8. ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னர் எந்த வம்சத்தைச் சேர்ந்தவர்?
   நாயக்கர் வம்சம்

**கி.மிதுசா,**
**கோணாவில் ச.த.க. பாட., கிளிநொச்சி.**




# உண்மைக்கு கிடைத்த பலன்

ஒரு சிறுவன் வீட்டுத் தோட்டத்தைச் சுத்தம் செய்கிறேன் என்று கூறி, அடர்ந்த செடிகளை வெட்டிச் சாய்த்துக்கொண்டிருந்தான். அவ்வாறு வெட்டியபோது, அவனுடைய தந்தை ஆசையாக வளர்த்து வந்த ரோஜாச்செடியும் வெட்டுப்பட்டுவிட்டது. குடும்பத்தினர் அனைவருக்கும் பயம். ஏனெனில், அவனது தந்தை மிகுந்த கோபக்காரர். இதனால், அவரை எவ்வாறு சமாளிப்பது என்பது தெரியாமல் அனைவரும் பயந்து கொண்டிருந்தனர்.

மறுநாள், "யார் ரோஜாச் செடியை வெட்டியது?" என்று தோட்டத்துக்குச் சென்று வந்த தந்தை கோபமாகக் கேட்டார். அடிதான் விழப் போகிறது என்று காத்திருந்தவர்களுக்கு இன்ப அதிர்ச்சி.





"நான் தான் அப்பா வெட்டினேன். தோட்டத்தைச் சுத்தம் செய்து கொண்டிருந்தபோது தவறுதலாக வெட்டிவிட்டேன்" என்றான் சிறுவன். அடுத்து அவர் ஒன்றும் செய்யவில்லை.

"இனிமேல் கவனத்துடன் வேலை செய்யவேண்டும்" என்று மட்டும் கூறினார்.

"ஏன் அடிக்கவில்லை?" என்று, குடும்பத்தினர் கேட்டபோது...

அதற்குத் தந்தை சொன்ன பதில், "தைரியமாக உண்மையைச் சொன்னவனைத் தண்டித்தால், அவன் வாழ்க்கையே பொய்யாகி விடும். மேலும், அவனால் உண்மையான வீரனாக வாழ முடியாது" என்றார். அன்று உண்மை பேசிய அந்தச் சிறுவன்தான் பிற்காலத்தில், அமெரிக்காவின் ஜனாதிபதியாக உயர்ந்த ஜோர்ஜ் வொஷிங்டன் ஆவார்.

# காகங்களுக்கு மொழி உள்ளதாம்

நாம் நம்மைப் போன்றவர்களுடன் பேசிக்கொள்வதற்கு ஒவ்வொரு மொழி இருக்கின்றது. அவ்வாறே, பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் மொழிகள் உள்ளன.



பறவைகளுக்கிடையில் கூடுதலான மொழி அறிவைப் பெற்றவை காகங்கள் தானாம். எனினும், நமக்குத் தெரிந்தது காகத்தின் "கா.....கா...." என்ற மொழி மட்டும்தான். ஆனால், அவை தமக்கிடையே, கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்காக, முன்னூறுக்கும் அதிகமான வித்தியாசமான ஓசைகளை எழுப்புகின்றன.

ஒவ்வொரு நாட்டிலும் வாழும் காகங்களுக்கிடையே, மொழிகள் வேறுபடுகின்றன. ஒவ்வொரு நாட்டுக் காகங்களுக்கும் ஒவ்வொரு மொழி உண்டு. இதனால், ஒரு நாட்டுக் காகம் இன்னொரு நாட்டுக்குச் சென்றால், மொழி வேறுபாட்டினால் திணறிப்போகும். ஆனால், வெகுதூரம் அதாவது, பல நாடுகளுக்குப் பறக்கும் காக்கைகள் பலவிதமான தமது மொழிகளைத் தெரிந்து வைத்திருக்கின்றனவாம்.

**ரிஸ்மினா முஸ்ஸம்மில்,**
**ஹெம்மாதகமை.**



# உலகின் பிரபல்யம் மிக்க ஏரிகள்

| ஏரியின் பெயர் | அமைந்திருக்கும் இடம் | பரப்பளவு |
|---|---|---|
| 01. கெஸ்பியன் கடல் ஆசியா | ஐரோப்பா | 3,71,000 $km^2$ |
| 02. சுப்பீரியர் ஏரி | வட அமெரிக்கா | 82,100 $km^2$ |
| 03. விக்டோரியா | ஆபிரிக்கா | 69,500 $km^2$ |
| 04. ஹிரோன் | வட அமெரிக்கா | 59,500 $km^2$ |
| 05. மிக்சிகன் | வட அமெரிக்கா | 57,800 $km^2$ |
| 06. தங்கனிகா | ஆபிரிக்கா | 32,900 $km^2$ |
| 07. பெய்கஸ் | ஆசியா | 31,500 $km^2$ |
| 08. கிரேட் பீர் | வட அமெரிக்கா | 31,300 $km^2$ |
| 09. அரல் கடல் | ஆசியா | 30,700 $km^2$ |
| 10. மலாவி | ஆசியா | 28,900 $km^2$ |

**எம்.ஆர்.எம்.மாஸின்,**
**க/அஸ்ஹர் கல்., அக்குறணை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'A' படத்துடன் 'B' படத்தை ஒப்பிட்டுப் பார்த்து 'B' படத்தில் குறைந்தது 10 வித்தியாசங்களையேனும் இனங்கண்டு புள்ளடியிடுக

2

(A)




(B)



## அறிவுக்கு விருந்து - 370 விடைகள்

போட்டி: 01

1. சூரியன்
2. பானம்
3. குறைபாடு
4. கேண்மை
5. அக்கினி

போட்டி: 02

1. ஐக்கிய அமெரிக்கா - சுதந்திரதேவி சிலை
2. எகிப்து - கீஸா பிரமிட்
3. பிரான்ஸ் - ஜஃபள் கோபுரம்
4. இத்தாலி - பைஸா கோபுரம்
5. வெனிசுவெலா - கெரெபாகுபாய் வெனே (ஏஞ்சல் நீர்வீழ்ச்சி)

போட்டி: 02



பின்வரும் சொற்களுக்கான ஆங்கிலச் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக

4

hair/ cave/ zebra/ curve/ sea/ hare/ ocean/ giraffe)

1. முயல் - ..............................
2. வளைவு - ..............................
3. ஒட்டகச்சிவிங்கி - ..............................
4. குகை - ..............................
5. சமுத்திரம் - ..............................
6. தலைமுடி - ..............................
7. கடல் - ..............................
8. வரிக்குதிரை - ..............................

## வழி காட்டுங்கள்

3







தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2012.07.18 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 373
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 370 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

போட்டி: 01

ஜே.அகீசன், மன்னார் வீதி, வேப்பம்குளம்.

போட்டி: 02

எம்.ஐ.இஸ்னா, பள்ளிவாசல் வீதி, ஒலுவில்-02.

போட்டி: 03

எம்.ஹயாஸ், பள்ளிவாசல்துறை, புத்தளம்.

போட்டி: 04

பஸ்ஹா நிசார், ஹெட்டிவீதி, வெலிகம.

போட்டி: 05

ஷெலோமி ரொபர்ட், பழைய வீதி, பலாங்கொடை.

**பாராட்டுப் பெறுவோர்:**

- பி.எழிலினி, பண்ணாகம் தெற்கு.
- எஃப். நுஹா, பந்தாவ.
- எச்.நஜீப், காத்தான்குடி.
- வத்ஷலன் அஜய், மாளிகாவத்தை.
- என்.மினோலி, மாத்தளை.
- எஸ்.பாத்துன்நிஷா, அநுராதபுரம்.
- சலீமா ஜிப்ரி, கல்கிசை.
- எஸ்.டி.பிரகாஷ், கெட்டபுலா.
- எம்.முஜீபா, வாழைச்சேனை-04.
- சி.யுவன், ராஜகிரிய.

## ரோமன் இலக்கத்தில் எழுதுக

5

அ) 130 - ..............................

ஆ) 48 - ..............................

இ) 500 - ..............................

ஈ) 12 - ..............................

உ) 95 - ..............................

ஒவ்வொரு நிறத்திலுமான உருக்களின் எண்ணிக்கையுடன் இணைக்க

1




## படித்தவற்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள...






✱ இரவில் பாடம் படித்தபின், வேறு எந்த வேலைகளையும் செய்யாமல் நித்திரைக்குச் சென்றுவிடுங்கள்.

✱ மறுநாள் காலை எழுந்தவுடன், வேறு எந்த வேலையிலும் உங்களை ஈடுபடுத்திக்கொள்ள முன், இரவில் படித்தவற்றை ஞாபகப்படுத்திப் பாருங்கள்.

✱ இரவில் நெடுநேரம் கண்விழித்துப் படிப்பது என்று இல்லாமல், போதுமான அளவு உறங்குவது ஞாபகசக்தியைப் பாதிக்காமல் இருக்கும்.

✱ பொதுவாக, காலையில் மனம் தூய்மையோடும் புத்துணர்வோடும் இருக்கும். ஆக, கடினமான பாடங்களை காலை வேளையில் படித்தால் எளிதில் மனதில் பதியும்.

✱ முறைப்படியான மீள்பார்வை (ரிவிஷன்), நல்ல நினைவாற்றலையும் கற்றவற்றை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவரும்.

✱ சில பாடங்களுடன் தொடர்புடைய விடயங்களை குறிப்புகளாகவோ, கட்டுரைகளாகவோ எழுதிப்படிப்பதைவிட, விளக்கப்படமாகக் கற்றுக்கொள்வதனூடாக மனதில் இலகுவில் பதிந்துவிடும். எனவே, அத்தகைய பாடம் தொடர்பான படங்களை அடிக்கடி மீட்டிப் பார்க்க வேண்டும்; வரைந்து பார்க்கவும் வேண்டும்.

✱ எல்லாவற்றுக்கும் மேலாக முக்கியமான விடயம் கற்றலில் நீங்கள் காட்டும் ஈடுபாடு. கற்றலில் நமக்கு ஆர்வம், ஈடுபாடு இல்லாமல் இருந்தால், கற்பது நினைவில் பதியாது. ஆக, படிப்பதை கடமையாக மேற்கொள்ளாமல், பிடித்தமான ஒரு விடயமாக மாற்றிக்கொண்டால், நிச்சயம் கற்றவையும் கற்பவையும் ஒருநாளும் மறக்கப்படாமல் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அப்புத்தளை-போவேயைச் சேர்ந்த சுரேஸ் மகேந்திரகுமார்-வசந்தி தம்பதியரின் செல்வப் புதல்வன் ஹரேன் பிரசாத், 03.07.2012 அன்று தனது ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, தம்பி டிரோன் உட்பட, குடும்பத்தினர்கள் அனைவரும் பல்லாண்டுகள் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



தெமட்டகொடையைச் சேர்ந்த அஸ்ஹர்-சுபா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஹாதிக் ஷாதிர், 03.07.2012 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறை அருள்பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



தெஹியங்கயைச் சேர்ந்த சுல்பிகார்-நுஸ்லா தம்பதியரின் செல்வப் புதல்வன் எம்.எஸ்.உமர், 01.07.2012 அன்று தனது முதலாவது பிறந்ததினத்தைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் உட்பட, குடும்பத்தினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

## ஓவியம் வரைவோம் - 110

ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

### தொலுவில புத்தர் சிலை



அநுராதபுரத்திலுள்ள கிராமமான 'தொலுவில' என்ற இடத்தில் இச்சிலை கண்டுபிடிக்கப்பட்டமையால், இச்சிலை 'தொலுவில புத்தர் சிலை' என அழைக்கப்படுகின்றது. இது இன்றுவரை எந்த விதமான சிதைவுகளுக்கும் உள்ளாகாமல் இருப்பது முக்கிய விடயமாகும். இதன் உயரம் 5 அடி 9 அங்குலமாகும். இது அமராவதி சம்பிரதாயத்திற்குரியது. கி.பி. 4-5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. தியான முத்திரையுடன் விராசனத்தில் உட்கார்ந்த நிலையில் தொலுவில புத்தர் சிலை காணப்படுகின்றது. இது தற்போது கொழும்பு தேசிய நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது. அநுராதபுரத்தில் கிடைக்கப்பெற்ற மிகவும் சிறந்த சிலைகளில் தொலுவில புத்தர் சிலையும் ஒன்றாகும்.

### ருவன்வெலிசாய புத்தர் சிலை



அநுராதபுரக் காலத்தில் ருவன்வெலிசாய விகாரையின் சிலை வீட்டில் (பிலிமகே) உள்ள இந்தச் சிலையானது, அமராவதி சிற்ப முறைக்கேற்ப செதுக்கப்பட்டுள்ளது. தலையின் பின்புறம் வட்ட வடிவிலான அலங்காரம் உள்ளது. உடைகளின் மடிப்புகள் மிகத் தெளிவாகவும் இடது கையால் உடையைத் தாங்கி இருப்பது போலவும் செதுக்கப்பட்டுள்ளது.

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எஃப்.மர்ஜியா,
எதுன்கஹகொடுவ மு.ம.கல்.,
எதுன்கஹகொடுவ.



எஃப்.முஸீரா,
தல்துவ மு.ம.வித்., தல்துவ.



அ.தர்ஷனப்பிரியா,
மாதம்பை இல-2, த.வித்.,
இறக்குவானை.



தே.பிரியதர்சன்,
முருகானந்தா கல்லூரி, கிளிநொச்சி.




ஜெ.வேணுஜன்,
புதுக்குளம் ம.வித்., வவுனியா.



செ.துவாரகன்,
இராமநாதபுரம் கி.அ.த.க.பாட.,
கிளிநொச்சி.



எஃப்.றிபாதா,
அல்-அமான் மு.ம.வித்.,
கல்லொழுவ.



எம்.பஸ்னத்,
ரஹ்மானியா ம.வித்., வெலிபென்ன.



என்.சந்தியா,
இறத்தோட்டை இ.ம.வித்.,
இறத்தோட்டை.



அல்பான் அஹமட்,
அரபா தேசிய பாட.,
வெலிகம.



எஃப்.நுஹா,
அல்-இர்பான் மத்.கல்.,
பொல்கஹவெல.



எஃப்.மின்ஹா,
அக்குறனை மு.பா.வித்.,
அக்குறனை.



கு.டசிகரன்,
உசன் இராமநாதன் ம.வித்.,
கரம்பகம்.



எஸ்.வினோத்,
கெட்டபுலா த.ம.வித்.,
கெட்டபுலா.



கே.லக்ஷேன்,
நோர்வூட் த.ம.வித்., நோர்வூட்.



எம்.உமைர்,
ஒட்டுக்குளம் ஹிஜ்ரா மு.வித்.,
ஒட்டுக்குளம்.



ஏ.றிஸ்வான்,
விக்னேஸ்வரா ம.வித்.,
திருகோணமலை.



கே.கீர்த்திகா,
கலைமகள் த.வித்., மாவத்துறை.

## பிறந்தநாள் வாழ்த்துக்கள் குறித்து கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்புபவர்கள், குறித்த பிறந்தநாள் நிகழ்வுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்த வாழ்த்துக்கள் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். தாமதித்துக் கிடைப்பவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகத்தின் தந்திரம்



ஒருநாள் சூரியன் மறையும் நேரம், நாகபாம்பு ஒன்று இரைதேடுவதற்காக கரையோரத்தில் உள்ள புதரில் இருந்து கிளம்பி, புற்கள் நிறைந்த வாய்க்காலின் நடுவே சென்றுகொண்டிருந்தது. போகும் வழியில் தன் கண்ணில் பட்ட ஒன்றிரண்டு தவளை மற்றும் புழுக்களைப் பிடித்து இரையாக உட்கொண்டது.

இதேவேளை, நாகம் சென்றுகொண்டிருந்த அதே வாய்க்காலில், மயில் ஒன்று பாம்பை நோக்கி வந்துகொண்டிருந்தது. மயிலைக்கண்டதும் பாம்பிற்கு நடுக்கமெடுத்தது. மயிலிடமிருந்து தப்பிக்க வந்த வழியே செல்லத் திரும்பியது. ஆனால், திரும்பிய திசையின் எதிரே கீரிப்பிள்ளை ஒன்று தன்னை நோக்கி வருவதை அறிந்தது. இதனால் 'இருதலைக் கொள்ளி எறும்பின்' நிலையை அடைந்த நாகம், தனது இரண்டு பகைவர்களிடமிருந்து தப்பிக்க வழி கிடைக்காதா? என்று தவித்தது. ஒரு நிமிடம் தாமதித்தால்கூட 'நம் கதி அதோ கதிதான்' எனக் கதி கலங்கியது. அப்போது, வரப்பின் ஓரத்தில் நண்டுப் பொந்து ஒன்று காணப்படவே, நாகம் அதனுள் விரைவாக நுழைந்துகொண்டது. திடீரென நுழைந்த நாகபாம்பைக் கண்ட நண்டுக்குஞ்சுகள், அலறி அடித்துக்கொண்டு தாய் நண்டை அண்டி நின்றன.

தன்னைக் கண்டு பயந்து நடுங்கிக்கொண்டிருந்த நண்டுகளைப் பார்த்த நாகம், "நண்பர்களே! என்னைக் கண்டு நீங்கள் பயப்பட வேண்டாம். என் பகைவர்களாகிய மயில் மற்றும் கீரிப்பிள்ளையிடம் இருந்து தப்பிக்கவே உங்கள் பொந்தினுள் நான் தஞ்சம் புகுந்துள்ளேன். என் பகைவர்கள் சென்றபின் நான் என் வழியே சென்று விடுகிறேன்" என்று கூறியது.

சிறிது நேரம் கழித்துத் தன் பகைவர்கள் சென்று விட்டார்களா? என அறிய, தன் தலையை உயர்த்தி வெளியே நாலா பக்கமும் பார்த்தது. மயிலும், கீரியும் சென்றுவிட்டதை அறிந்த நாகம், அடைக்கலம் தந்த நண்டுக் குடும்பத்தாருக்கு நன்றி கூறிவிட்டுப் பொந்தை விட்டு வெளியே கிளம்ப எத்தனித்தது.

அந்தச் சமயத்தில் பஞ்சு போன்ற அடர்த்தியான ரோமங்களுடன் கூடிய வால் ஒன்று பொந்தினுள் நுழைந்தது. அதைக்கண்ட நாகம், "பொந்தினுள் வால் போன்று ஒன்று நுழைகிறதே... இது என்ன?" என நண்டுகளிடம் வினவியது.

இதுவா "இது நரியின் தந்திரம். நாங்கள் வசிக்கும் பொந்தினுள் நரி தன் வாலை நுழைக்கும். அதை அறியாத சின்னஞ்சிறுசுகள், ஏதோ இது உணவுதான் என எண்ணி வாலின் ரோமத்தைக் கௌவும். கௌவியதை உணர்ந்த நரி தன்னு டைய வாலை 'படக்' என வெளியே இழுத்து, வாலில் கௌவிய சிறிய நண்டுகளை 'லபக்' எனச் சாப்பிட்டு விடும். இது தினந்தோறும் நடக்கிறது. இந்நிலை நீடித்தால் எங்கள் இனத்தையே நரி அழித்துவிடும்" என கண்ணீர் சிந்தாத குறையாக தாய் நண்டு கூறியது.

இதைக் கேட்ட நாகம், "அன்பர்களே! பயப்படாதீர்கள். நான் இந்த வாலின் நுனிப் பகுதியைப் பலமாகக் கௌவிப் பிடித்துக் கொள்கிறேன். நீங்கள் அனைவரும் சேர்ந்து வாலில் உள்ள ரோமங்களைக் கத்தரித்து விடுங்கள். அப்படி நீங்கள் செய்தால் நரியின் வால் மொட்டையாகிவிடும். அடுத்த முறை பொந்தினுள் வாலை நுழைத்து உங்களைச் சாப்பிட முடியாது. உங்கள் இனத்தாரும் தப்பித்துக்கொள்வார்கள்" எனக் கூறி, நாகம் நரி வாலின் நுனிப்பகுதியைக் கௌவிப் பிடித்துக்கொண்டது. தக்க சமயம் வாய்த்தது என எண்ணிய நண்டுகள், வாலில் உள்ள குஞ்சம் போன்ற பகுதியை நொடியில் கத்தரித்து நரியின் வாலை மொட்டையாக்கிவிட்டன.

தன்னுடைய வாலை ஏதோ ஒன்று இறுக்கமாகக் கௌவிப் பிடித்ததை அறிந்த நரி, 'படக்' என வாலை உருவிக்கொண்டு வலி பொறுக்க முடியாமல் ஊளையிட்டுக்கொண்டே தன் இருப்பிடம் நோக்கி ஓடியது. மொட்டை வாலுடன் வந்த நரி பார்ப்பதற்கு நாய் போன்று காணப்பட்டதால், நாய்தான் நம்மை வேட்டையாட வந்து விட்டது என எண்ணிய ஏனைய நரிகள் நாலா பக்கமும் ஓட ஆரம்பித்தன.

இதைக்கண்ட மொட்டை வால் நரி, "சகோதரர்களே... நில்லுங்கள்! நான் உங்கள் இனத்தைச் சேர்ந்த நரி தான்" எனக் கூறியது. இதைக் காதில் வாங்காத ஏனைய நரிகள் அதைத் தனிமையில் விட்டுச் சென்றுவிட்டன.

'உழைத்து உண்பதே உன்னதம், உணவுக்காகப் பிறரை ஏமாற்றி வாழ்வது என்பது நீண்ட காலம் நிலைக்காது, இதை உணராமல் தன் தந்திரத்தால் பிறரை ஏமாற்றிப் பிழைத்த நரி, தன் வால் மொட்டையானதால் இரை தேட முடியாமலும், தன் இனத்தாருடன் சேர்ந்து வாழ முடியாமலும் பட்டினியால் வாடி இறந்தது.

# நந்தவனம்

மலர்ந்த தோட்டத்தில் பூக்களின்மீது வந்தமரும் பட்டாம்பூச்சிகளாக இருக்கைகளில் வந்தமர்ந்தனர் மாணவ-மாணவிகள். வகுப்பறையே, பறவைகளின் சோலையாகக் காட்சியளித்தது. மகிழ்ச்சியால் குரல்கள் கீச்சிட குதூகலமாக இருந்தன குழந்தைகள். எனினும், அந்தப் பாடசாலையில் கண்டிப்பு மிகுந்த ஆசிரியை மலர். தனது வகுப்பை கட்டுக்கோப்பாக, மயான அமைதியாக வைத்துக் கொள்வார். அன்று சின்னஞ்சிறு மாணவ-மாணவிகள் எதிரே, ஆசிரியை மலர் அமர்ந்திருந்தார். ஏனோ, அன்று அவர் மிக



அமைதியாக இருந்தார். தமது ஆசிரியையை அவதானித்த குழந்தைகளும் அமைதி யானார்கள். எப்போதும் சிடுசிடுப்பாக இருக்கும். தங்கள் ஆசிரியை விடுமுறை முடிந்து பாடசாலை திறந்த முதல் நாளே பசுவாகப் பேசுவதையும், இனிய முகத்தோடு பார்ப்ப தையும் கண்டு மாணவர்கள் அதிசயப்பட்டனர் .

அன்றைய தினம் வகுப்பு முடிந்து மாணவர்களும் மாணவிகளும் வகுப்பறையைக் கடந்துசென்றபோது, மலர் ஆசிரியை இன்னொரு ஆசிரியையிடம் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு அப்படியே நின்றனர்.

"இன்றைக்கு வகுப்பில் கெடுபிடி இல்லாமல், மாணவ, மாணவிகளிடம் தாயைப்போல நடந்துகொண்டாய். எல்லோரும் கேட்கிறார்கள் என்னவாயிற்று உனக்கு என்று? முதல் நாளே அவர்களுக்குச் செல்லம் கொடுத்தால் குறும்புத்தனத்தை ஆரம்பித்துவிடுவார்கள் அல்லவா?" என்று அந்த ஆசிரியை கூறினார்.

"இல்லை. டீச்சர் பாடசாலை திறந்து முதல்நாள் மகிழ்ச்சியோடு மாணவர்கள் இங்கு வருகிறார்கள். பாடசாலை பழசுதான், நாமும் பழசுதான். இந்த ஆண்டு, இந்த நாள் புதிய நாள்தானே? முதல்நாள் அவர்கள் மனதில் பாடசாலை சிறைக்கூடமாகத் தெரியக்கூடாது. நந்தவனமாகத் தெரியவேண்டும். அதனால்தான் நான் கடுமையாக நடந்துகொள்ளவில்லை" என்று கூறிவிட்டு நடந்தார் மலர் ஆசிரியை.

இதைக்கேட்ட மாணவ-மாணவிகள் தமது ஆசிரியையின் அன்பையும் நற்குணத்தையும் கண்டு வியந்தனர்.

# வெங்காயத்தின் ஆசை

*ஒரு வயலில் வெங்காயம், உருளைக்கிழங்கு, தக்காளி என்பன பயிரிடப்பட்டிருந்தன. ஒரே வயலில் விளைந்ததால் அவை, நெருங்கிய நண்பர்களாகிவிட்டன. ஒவ்வொன்றும் அதன் அதன் இருப்பிடத்திலிருந்தே மற்றவர்களுடன் நாள் முழுவதும் பேசிக்கொண்டும் சுக நலன்களை விசாரித்துக்கொண்டும் மகிழ்வுடன் வாழ்ந்து வந்தன.*

*அறுவடைக் காலம் நெருங்கியதை உணர்ந்த தக்காளி "நமது நட்பு எவ்வளவு நாட்கள் நீடிக்கும் என்று தெரியவில்லை. எமது நட்பின் முடிவாக ஒருவேளை ஒருவரை ஒருவர் பிரிய நேரிட்டால் கண்ணீர் விட்டு, அழுது நம் கவலையைத் தீர்த்துக்கொள்ளவேண்டும்" என்று கூறியது.*

*"ஏன் இப்படி அபசகுணமாகப் பேசுகிறாய்? வாழும்போது சாவைப்பற்றி ஏன் நினைக்கிறாய்?" என்று தக்காளியை கடிந்துகொண்டன வெங்காயமும் உருளைக்கிழங்கும்.*

*"பிறந்தவர் மறைவது இயற்கைதானே! இதில் என்ன அபசகுணம்? நெருப்பு என்றால் வாய் சுட்டு விடுமா என்ன?" என்றது தக்காளி.*

*சில நாட்களின் பின் உருளைக்கிழங்கு நன்றாக விளைந்து விட்டதால் அதனை, அறுவடை செய்து எடுத்துச் சென்றுவிட்டனர். தக்காளியும் வெங்காயமும் உருளைக்கிழங்கின் பிரிவைத் தாங்க முடியாமல் கதறி அழுதன. அந்த அழுகை ஓய்வதற்குள் தக்காளி பழுத்துவிட்டது என்று தக்காளியையும் பறித்துச் சென்றுவிட்டனர்.*



*இப்போது வெங்காயம் மட்டும் தக்காளிக்காகவும் உருளைக்கிழங்கிற்காகவும் சேர்த்து அழுதது. அத்துடன், இன்னொரு வருத்தமும் அதற்கு எழுந்தது. உருளைக்கிழங்கிற்கு நானும் தக்காளியும் சேர்ந்து அழுதோம். தக்காளிக்கு நான் அழுகிறேன். எனக்கு யார் அழுவார்கள் என்பதை நினைத்து நினைத்து அழ ஆரம்பித்தது வெங்காயம்.*

*ஒருநாள் வெங்காயமும் விளைந்துவிட்டதென்று அதையும் அறுவடை செய்துவிட்டனர். அப்போது வெங்காயத்தின் கவலை தனக்காக அழ யாருமில்லாமல் போய்விட்டார்களே என்பதுதான்.*

*அந்த வெங்காயத்தை ஒரு பெண்மணி கடையிலிருந்து விலைக்கு வாங்கி வீட்டிற்கு எடுத்துச் சென்றார். கத்தியை எடுத்து வெங்காயத்தை அரிந்தார். அப்போது அவர் கண்ணில் இருந்து கண்ணீர் வழிந்தது. இதனால், வெங்காயத்திற்கு நல்ல திருப்தி.*

*மகிழ்ச்சி அடைந்த வெங்காயம், 'என் மரணத்திற்காக, அழுவதற்கும் ஒருவர் இருக்கிறாரே' என்று எண்ணியது. அத்துடன், வெங்காயத்தின் ஆசை நிறைவேறியதுடன், அதன் ஆத்மாவும் சாந்தியடைந்தது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் பயில்வோம்




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் குடும்பத்தினர்களுக்கு இடையிலான உரையாடலைப் பார்ப்போம்

**පුතා:** **අම්මේ! අපි වෙසක් බලන්න යමුද?**
அம்மே! அப்பி வெசக் பலன்ன யமுத?
**மகன்:** **அம்மா! நாங்கள் வெசாக் பார்க்கப் போவோமா?**

**අම්මා:** **පුතා, තාත්තාට කියල බලන්න.**
புதா, தாத்தாட்ட கியல பலன்ன.
**அம்மா:** **மகன், அப்பாவிடம் சொல்லிப் பாருங்கள்.**

**පුතා:** **තාත්තේ! අපි වෙසක් බලන්න යමුද?**
தாத்தே! அப்பி வெசக் பலன்ன யமுத?
**மகன்:** **அப்பா! நாங்கள் வெசாக் பார்க்கப் போவோமா?**

**තාත්තා:** **රෑ වෙලා යමු. ඔක්කොමලා ලෑහැස්ති වෙන්න.**
ரே வெலா யமு. ஒக்கொமலா லெஹெஸ்தி வென்ன.
**அப்பா:** **இரவில் போவோம். எல்லோரும் ஆயத்தமாகுங்கள்.**

**පුතා:** **අක්කේ! තාත්තා රෑට වෙසක් බලන්න යන්න ලෑහැස්ති වෙන්න කිව්වා.**
அக்கே! தாத்தா ரேட்ட வெசக் பலன்ன யன்ன லெஹெஸ்தி வென்ன கிவ்வா.
**அக்கா! இரவில் வெசாக் பார்க்கப் போக ஆயத்தமாகும்படி அப்பா சொன்னார்.**

**අම්මා:** **අපි හවස පන්සල් ගිහිල්ලා, ඊට පස්සේ වෙසක් බලන්න යමු.**
அப்பி ஹவச பன்சல் கிஹில்லா, ஈட்ட பஸ்ஸே வெசக் பலன்ன யமு.
**அம்மா** **நாங்கள் பின்னேரம் விகாரைக்குப் போய்விட்டு, பின்னர் வெசாக் பார்க்கப் போவோம்.**

**දුව, මල් කඩා ගන්න.**
துவ, மல் கடா கன்ன.
**மகள், பூ பறித்துக்கொள்ளுங்கள்.**

**දුව:** **හොඳයි අම්මේ.**
ஹொந்தய் அம்மே.
**மகள்:** **நல்லது அம்மா.**

**பின்னேரம் வெசாக் பார்க்கச் சென்றவேளையில்....**

**පුතා:** **අම්මේ! අර තොරණක්. අපි යමු ඒක බලන්න.**
அம்மே! அர தொரணக். அப்பி யமு ஏக்க பலன்ன.
**மகன்:** **அம்மா! அதோ ஒரு தோரணம். நாங்கள் அதைப் பார்க்கப் போவோம்.**

**දුව:** **ඒ තොරණ හරි ලස්සනයි අම්මේ.**
ஏ தொரண ஹரி லஸ்ஸணய் அம்மே.
**மகள்:** **அந்தத் தோரணம் மிகவும் அழகானது அம்மா.**

**මල්ලි, අර තව ලොකු වෙසක් කූඩුවක්.**
மல்லி, அர தவ லொகு வெசக் கூடுவக்.
**தம்பி, அதோ இன்னொரு பெரிய வெசாக் கூடு.**

**පුතා:** **ඒකත් හරි ලස්සනයි නේද අක්කේ?**
ஏகத் ஹரி லஸ்ஸணய் நேத அக்கே?
**மகன்:** **அதுவும் நல்ல அழகுதானே அக்கா?**

**තාත්තා:** **පුතා, දැන් රෑ වුණා. ගෙදර යමු.**
புதா, தென் ரே வுணா. கெதர யமு.
**அப்பா:** **மகன், இப்போது இரவாகிவிட்டது. வீட்டிற்குப் போவோம்.**

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. வெசாக் பார்க்கப் போவோமா?
..............................................................
ii. எல்லோரும் ஆயத்தமாகுங்கள்.
..............................................................
iii. அதோ ஒரு தோரணம்.
..............................................................






நிகழ்கால வினைமுற்று வாக்கியம் (Present Perfect Tense) மற்றும் இறந்தகால தனி வாக்கியம் (Past Simple Tense) ஆகியவற்றை தன் கூற்று நிலையில் இருந்து, பிறர் கூற்று நிலைக்கு மாற்றியமைக்கும் முறை பற்றி மேலும் இங்கே பயில்வோம்.

✱ நிகழ்கால வினைமுற்று வாக்கியம்
(Present Perfect Tense)

(அ) ரஞ்ஜித் கூறினான், "நான் புதிய பேனா ஒன்று வாங்கியுள்ளேன்" என்று.
Ranjith said, "I have bought a new pen."
(தன் கூற்று வாக்கியம் -Direct Speech)

(ஆ) தான் புதிய பேனா ஒன்று வாங்கியுள்ளதாக ரஞ்ஜித் கூறினான்.
Ranjith said that he had bought a new pen.
(பிறர் கூற்று வாக்கியம் -Indirect Speech)

இறந்தகால தனி வாக்கியம்
(Past Simple Tense)

(இ) ரஞ்ஜித் கூறினான், "நான் புதிய பேனா ஒன்று வாங்கினேன்" என்று.
Ranjith said, "I bought a new pen."
(தன் கூற்று வாக்கியம் -Direct Speech)

(ஈ) தான் புதிய பேனா ஒன்று வாங்கியதாக ரஞ்ஜித் கூறினான்.
Ranjith said that he had bought a new pen.
(பிறர் கூற்று வாக்கியம் -Indirect Speech)

**குறிப்பு: நிகழ்கால வினைமுற்று வாக்கியம் ஒன்றை அல்லது இறந்தகால தனி வாக்கியம் ஒன்றை, தன் கூற்று நிலையில் இருந்து, பிறர் கூற்று நிலைக்கு மாற்றியமைக்கும்போது, அந்த இரண்டு வாக்கியங்களும் இறந்தகால வினைமுற்று வாக்கியங்களாக அமைய வேண்டும் என்பதை நாம் ஞாபகத்தில்கொள்ள வேண்டும்.**

✱ நிகழ்கால வினைமுற்று வாக்கியம்
(Present Perfect Tense)

(உ) மேரி கூறினாள், "நான் எல்லா வினாக்களுக்கும் விடையளித்துள்ளேன்" என்று.
Mary said, "I have answered all the questions."
(தன் கூற்று வாக்கியம் -Direct Speech)

(ஊ) தான் எல்லா வினாக்களுக்கும் விடையளித்துள்ளதாக மேரி கூறினாள்.
Mary said that she had answered all the questions.
(பிறர் கூற்று வாக்கியம் -Indirect Speech)

✱ இறந்தகால தனி வாக்கியம்
(Past simple Tense)

(எ) மேரி கூறினாள், "நான் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தேன்" என்று.
Mary said, "I answered all the questions."
(தன் கூற்று வாக்கியம் -Direct Speech)

(ஏ) தான் எல்லா வினாக்களுக்கும் விடையளித்ததாக மேரி கூறினாள்.
Mary said that she had answered all the questions.
(பிறர் கூற்று வாக்கியம் -Indirect Speech)

**குறிப்பு:** மேற்படி தன் கூற்று வாக்கியங்களில் (உ மற்றும் எ) காண்பிக்கப்பட்டுள்ளதன்படி.

(உ) I have answered. (Present Perfect Tense)
நான் விடையளித்துள்ளேன். (நிகழ்கால வினைமுற்று)

(எ) I answered. (Past Simple Tense)
நான் விடையளித்தேன். (இறந்தகால தனி வாக்கியம்)

✱ பிறர் கூற்று நிலையில், இந்த இரண்டு வகை வாக்கியங்களும் இறந்தகால வினைமுற்றாக (Past Perfect Tense) மாற்றப்பட்டுள்ளதை நாம் அவதானிக்க வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ச் 20 ஐ சர்வதேச மகிழ்ச்சி தினமாக ஐ.நா.பிரகடனம்





ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 20 ஆம் திகதியை 'சர்வதேச மகிழ்ச்சி தினமாக' ஐக்கியநாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ளது.

ஐ.நா. சபையில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்திற்கமையவே, மேற்படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. மனித சமூகமானது, மகிழ்ச்சியுடனும் இயல்பாகவும் வாழ விரும்புகின்ற ஒரு இனமாகும். எனவேதான், இதனை சிறப்பிக்கு முகமாக இதற்கென சிறப்பு தினமொன்றைப் பிரகடனம் செய்திருப்பதாக ஐ.நா. சபை அறிவித்துள்ளது.




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

## பங்களாதேஷில் ஏற்பட்ட வெள்ளத்தில் பலர் மரணம்

பங்களாதேஷின் தென் பகுதிகளில் தொடர்ச்சியாகப் பெய்த மழையின் காரணமாக, ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் இயல்பு நிலைக்கு வராத நிலையில் தொடர்ந்து மீட்புப்பணிகள் நடைபெற்று வருவதாக குறிப்பிடப்படுகின்றது. ஆரம்ப செய்திகளின்படி, மேற்படி வெள்ளப்பெருக்கின் காரணமாக 115 பேருக்கு மேல் மரணமடைந்திருப்பதாகவும் ஏராள மானவர்கள் காணாமல் போயிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.



## ஜப்பானில் ஆளுங் கட்சியினர் 50 பேர் பதவி விலகல்



ஜப்பான் அரசாங்கம் வரி அதிகரிப்பை மேற்கொள்வதற்கு எடுத்த தீர்மானத்திற்கு எதிர்ப்பை காட்டு முகமாக அந்நாட்டின் ஆளும் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் 50 பேர் தமது பதவிகளிலிருந்து விலகியுள்ளனர். இச்ரோ ஒஸாவா என்ற உறுப்பினரின் தலைமையிலான குழுவொன்றே இவ்வாறு பதவி விலகியுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள இச்ரோ தாம் புதிய கட்சியொன்றை அமைக்கவுள்ளதாக அறிவித்துள்ளார். பதவி விலகிய நாடாளுமன்ற உறுப்பினர்களில் 38 பேர் நாடாளுமன்ற கீழ்சபையை சேர்ந்தவர்கள் என்பதும் 12 பேர் மேல்சபை உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்களைத் தொடர்ந்து இன்னும் சிலரும் அரசாங்கத்திலிருந்து விலகுவதற்கு தயாராகி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இருப்பினும் நாடாளுமன்ற ஆட்சியை கொண்டு நடத்துவதற்கான பெரும்பான்மை பலத்தை ஆளுங்கட்சி தொடர்ந்தும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிரியாவில் இடைக்கால அரசாங்கம் அமைக்கப் பணிப்பு



சிரியாவில் இடைக்கால அரசாங்கமொன்று அமைக்கப்படவேண்டும் என்று ஐ.நா. வின் அமைதித் தூதுவராக கடமையாற்றும் கொஃபி அனான் கூறியுள்ளார். அரசாங்க உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களை உள்ளடக்கியதாக இந்த இடைக்கால அரசாங்கம் அமைய வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



மேற்படி தீர்மானத்தை மேற்கொண்ட செயற்குழுக் கூட்டத்தில் ரஷ்யா, சீனா உட்பட மேற்குல நாடுகள் பலவும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் ஐ.நா. வின் இத்திட்டத்திற்கு மதிப்பளித்து சிரியாவில் உடனடியாக யுத்தநிறுத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்று கொஃபி அனான் அழைப்பு விடுத்துள்ளதுடன், சர்வதேச ஊடகங்கள் சிரியாவிற்குள் செயற்படுவதற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்றும் மேற்படி கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### அற்லஸ் கேள்வி - 368

**கேள்வி:** சிரியா விடயத்தில் ஐ.நா.வின் அமைதித் தூதுவராக கடமையாற்றுபவரின் பெயர் என்ன?

சரியான விடை.................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 368,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 366 இன் சரியான விடை: 1924 ஆம் ஆண்டு**

பரிசு பெறுவோர்

ஜே.அபிஷன்,
மன்னார் வீதி, வவுனியா.

விஜி செல்வாம்பிகை,
புவக்பிட்டிய,அவிசாவளை.

ஏ.சரோன்ராஜ்,
குமாரகந்த வத்த, கலஹா.

## தெரிந்து கொள்வோம்

* தேசிய அடையாள அட்டை ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்படுகின்றது. கடவுச் சீட்டைப் (Passport) பெற்றுக் கொள்ள எந்தத் திணைக்களத்திற்கு செல்ல வேண்டும்?
  குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கு



* ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டே காணப்படும் நாடாளுமன்றக் கட்டடத்திற்கருகில் ஓடும் நதியின் பெயர் என்ன?
  தியவன்னா ஓய



* உலக வரைபடத்தில் மிகவும் கூடிய நாடுகளைக் கொண்ட கண்டம் ஆபிரிக்காவாகும். மிகவும் குறைந்த நாடுகளைக் கொண்ட கண்டம் எது?
  அவுஸ்திரேலியா
* தெற்காசிய நாடுகள் என்றால் சார்க் நாடுகளைக் குறிக்கும் சொல்லாகும். தென்கிழக்காசிய நாடுகள் என அழைக்கப்படும் நாடுகள் எவை?
  தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, மியன்மார்
* இலங்கை வரலாற்றில் நாடாளுமன்றத் தேர்தல்கள் இரண்டுமுறை நடைபெற்றுள்ளது. அது எந்த ஆண்டில்?
  1960 ஆம் ஆண்டு
* 'கோஸ்னாட்'என்பது ரஷ்ய விண்வெளி வீரர்களைக் குறிக்கும் சொல்லாகும். அந்த வகையில், சீன விண்வெளி வீரர்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறார்கள்?
  டைகோனாட் (Talkonaut)



* உலக அமைதி தினம் ஒக்டோபர் 02 ஆம் திகதி ஆகும். இத்தினம் ஐ. நா. வால் உலகில் எந்தப் பெரியாரின் நினைவு தினமாகக் கொண்டாட பிரகடனப் படுத்தப்பட்டது?
  தேசபிதா மகாத்மா காந்தி அவர்களின் நினைவாக



* 'குக்' நீரிணை நியுசிலாந்தில் இரு தீவுகளுக்கிடையில் காணப்படுகின்றது. இந்த நீரிணைக்கு இந்தப் பெயர் சூட்டப்பட்டமைக்கு காரணம் என்ன?
  அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து நாடுகளைக் கண்டுபிடித்தவரான கப்டன் குக் என்பவரின் நினைவாகவே இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'யூரோ' கிண்ணம் ஸ்பெயின் வசம்

**14** ஆவது ஐரோப்பிய கால்பந்தாட்ட கிண்ணத்தை ஸ்பெயின் அணி கைப்பற்றியுள்ளது. உக்ரேன் நாட்டின் 'கிவ்' நகரில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இத்தாலி-ஸ்பெயின் அணிகள் மோதியதில் 4-0 என்ற கோல் கணக்கில் ஸ்பெயின் அணி வெற்றியீட்டி செம்பியன் கிண்ணத்தை வெற்றிகொண்டது.

இறுதிப் போட்டியின் முதல் பாதி ஆட்ட நேரத்தில் 2-0 என்ற கோல் கணக்கில் முன்னணியில் இருந்த ஸ்பெயின் அணி மிகுதிப்பாதி ஆட்டத்தின்போதும் இத்தாலிமீது ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்ததுடன், மேலும் இரண்டு கோல்களைப் போட்டு 4-0 என்ற கோல் கணக்கில் போட்டியில் வெற்றியீட்டியது.

ஏற்கனவே கடந்தமுறை ஐரோப்பிய கிண்ணத்தைக் கைப்பற்றியது ஸ்பெயின் அணியே என்பதும் நடப்பு உலக செம்பியன் ஸ்பெயின் அணியே என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஒலிம்பிக் பதக்கங்கள் தயாராகிவிட்டன



ஜூலை மாதம் 27 ஆம் திகதி ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. மேற்படி போட்டிகளில் போட்டியிட்டு வெற்றியீட்டியவர்களுக்கு வழங்கப்படவுள்ள பதக்கங்கள் தயாரிக்கப்பட்டு ஆயத்த நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெற்றியாளர்களுக்கு வழங்கப்படவுள்ள தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை ரியோடின்டோ என்ற நிறுவனமே தயாரித்துள்ளது. இதன்படி மொத்தமாக 4,500 பதக்கங்கள் தயார்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பதக்கங்கள் அனைத்தும் 'லண்டன் டவர்' பகுதியிலேயே பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக, லண்டன் டவரைச் சுற்றிவரப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வவ் போட்டிகளுக்கான பதக்கங்கள் வழங்கப்படும்வரை குறித்த பதக்கங்கள் மேற்படி லண்டன் டவரிலேயே வைக்கப்பட்டிருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 'ரோலர் ஸ்கேட்டிங்' இலங்கையிலும் அறிமுகம்

சக்கரம் பொருத்திய சப்பாத்தில் செல்லும் விளையாட்டான 'ரோலர் ஸ்கேட்டிங்' விளையாட்டை இலங்கையிலும் பிரபல்யப்படுத்தும் வேலைத் திட்ட மொன்றை 'ரோலர் ஸ்கேட்டிங்' பயிற்றுன ரான நீல் பெரேரா நடைமுறைப்படுத்தி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



உலகில் பல நாடுகளில் பிரபல்யம் பெற்றுள்ள 'ரோலர் ஸ்கேட்டிங்' விளையாட்டின்மீது இலங்கையில் உள்ளவர்களும் பலபேர் மிகுந்த அபிமானத்தைக் கொண்டிருப்பதாக நீல் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு, கண்டிப் பகுதி களைச் சேர்ந்த ஏராளமான பாடசாலைகளிலிருந்து 200 மாணவர்கள் அளவில் இந்தப் போட் டிகள் குறித்த பயிற்சிகளை வழங்குவதற்கு தேர்ந்தெடுத்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இந்த பயிற்சி நடவடிக்கைகள் நாளடைவில் இலங்கை பூராகவும் விரிவுபடுத் தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ரூபி இல்லம் கார்னட் இல்லம்

எமரல்ட் இல்லம் சஃபயர் இல்லம்

மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 'Spofest-2012' இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. Ruby-றூபி, Garnet- கார்னற், Emerald- எமரோல்ட், Sapphire- சபயர் ஆகிய நான்கு இல்லங்கள் போட்டியில் பங்கேற்றன. அந்த இல்லங்களின் ஆரம்பப்பிரிவு மாணவர்களையும், ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.



# 'ஜிம்னாஸ்டிக்ஸ்' பற்றி தெரிந்துகொள்வோம்

### வரலாறு

பழங்கால கிரேக்க மக்கள் பயன்படுத்திய ஒருவகையான உடற்பயிற்சிக் கலையே ஜிம்னாஸ்டிக்ஸ் ஆகும். அக்கால கட்டங்களில் அனைத்து முக்கிய கிரேக்க நகரங்களிலும் ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டு மைதானம் இருந்துள்ளது. இதில் ஆண்கள் பயிற்சி செய்துள்ளனர். பல்வேறு வகையான உடற்பயிற்சிக் கருவிகள் மூலம் உடற்பயிற்சிகள் செய்து உடற்றிறனை வெளிப்படுத்தும் இந்த விளையாட்டு 1896 ஆம் ஆண்டு முதல் ஒலிம்பிக் பந்தயங்களில் இடம்பெற்றுள்ளது.

### சாதனையாளர்கள்



ஒலிம்பிக் ஜிம்னாஸ்டிக்ஸ் போட்டியில் ஒரு பந்தயத்தில் ஒரு வீரர் அல்லது வீராங்கனைக்கு அவரது திறமையைப் பொறுத்து அதிகபட்சமாக 10 புள்ளிகள் வழங்கப்படும். இந்த 10 புள்ளியைப் பெற்ற முதல் வீராங்கனை ருமேனியா நாட்டின் நாடியா கொமான்சியா ஆவார். 1984 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் 'ஒலிம்பிக் ஓர்டர்' என்ற விருதை இவருக்கு சர்வதேச ஒலிம்பிக் சங்கம் வழங்கியது. இந்த விருதை மிக இளம் வயதில் இருமுறை பெற்ற ஒரே ஒரு வீராங்கனை நாடியா மட்டுமே. கம்பத்தில் நின்றபடி உடலை வளைத்துச் செய்யும் சாகச நிகழ்ச்சியில் சாதனை படைத்த முதல் ஜிம்னாஸ்டிக்ஸ் வீராங்கனையும் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### விதிமுறைகள்

ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டில் மொத்தம் 6 பிரிவுகள் உள்ளன. அவை வருமாறு: 1. போமல் ஹார்ஸ், 2. ரிங்ஸ் 3. ஹார்ஸ்வொலட் 4. தி பேரலல் பார்ஸ், 5. தி பீம் பேலன்ஸ் 6. புளோர் எக்சர்சைஸ்.

கட்டாயம் கலந்துகொள்ளவேண்டியவை மற்றும் விருப்பத்தெரிவு என்ற அடிப்படையில் போட்டிகள் நடைபெறும். கட்டாயம் கலந்துகொள்ள வேண்டிய பிரிவில் அனைத்து வீரர்-வீராங்கனைகளும் அந்தப் போட்டியை கண்டிப்பாகச் செய்ய வேண்டும்.விருப்பத்தேர்வு போட்டியில் வீரர்-வீராங்கனைகள் தங்கள் விருப்பப்படி இசை மற்றும் உடற்பயிற்சி முறையை அமைத்துக்கொண்டு தங்கள் திறமையை வெளிப்படுத்தலாம்.

சர்வதேச போட்டிகளில் கலந்துகொள்ள குறைந்தபட்ச வயது 16. இசை உடற்பயிற்சி போட்டியில் இசை ஒலிகள் மட்டுமே பயன்படுத்தப்படும். பாடல்களுக்கு அனுமதி இல்லை. சிறந்த ஜிம்னாஸ்டிக்ஸ் வீரர்-வீராங்கனையை தேர்வுசெய்ய 10 புள்ளிகள் என்ற அடிப்படை தேர்ந்து எடுக்கப்படுகிறது. ஒவ்வொரு போட்டியிலும் அதன் கடினத்தன்மைக்கு ஏற்ப புள்ளிகள் அமையும். தவறுகளின் தன்மைக்கு ஏற்ப 0.1 முதல் 0.4 வரை புள்ளிகள் குறைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி ஊடுருவும் திரையுடனான தொலைக்காட்சி

அண்மைக்காலமாக தொலைக்காட்சித் திரைகளில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. மெல்லிய திரைகள், தட்டையான திரைகள் என்று மனதைக் கொள்ளைகொள்ளும் விதத்தில் அவை அமைந்துள்ளன


புதிய தொலைக்காட்சித் திரைகொண்ட தொலைக்காட்சி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள (off) நிலையில், ஒளி ஊடுருவும் தன்மை கொண்ட அதன் திரையில் பின்னணிக் காட்சி தோன்றியிருப்பதைக் காணலாம்.

எனினும், விரைவில் இந்த முறைகளிலிருந்தும் சற்று முன்னேற்றகரமான திரையொன்று சந்தைக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த தொலைக்காட்சித் திரையின்படி, உங்களுக்குத் தொலைக்காட்சி பார்க்க வேண்டுமாயின், ஸ்விட்ச்சை அழுத்தினால், திரை தோன்றும். பின்னர் அதில் உங்களுக்குத் தேவையான நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். ஆனால், ஸ்விட்ச்சை நிறுத்தியதும் காட்சிகள் மறைந்து தொலைக்காட்சித் திரையோ வெளித்தெரியும் தன்மையுடையதாக அதாவது, ஒளி ஊடுருவக் கூடிய கண்ணாடி போன்று காட்சியளிக்கும்.

இதற்காக, புதிய தொழில்நுட்பம் ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளது. 'TOLED' தொழில்நுட்பம் என்று இதனை அழைக்கின்றனர். TOLED என்றால், 'Transparent Organic Light-Emitting Device' என்று அர்த்தப்படுகின்றது. இத்தொழில்நுட்பம் தற்போது பயன்பாட்டில் உள்ள 'OLED' தொழில்நுட்ப முறையிலும் முன்னேற்றகரமானதாகும்.

வெளித்தெரியும் தன்மைகொண்ட இந்த தொலைக்காட்சித் திரையினை மைக்கல் கிரிப் என்பவரே வடிவமைத்து உருவாக்கியுள்ளார். இவர் தனது இந்த வடிவமைப்பை கடந்த ஆண்டு இடம்பெற்ற புத்தாக்கப் போட்டியொன்றில் சமர்ப்பித்திருந்தார்.

''இந்த தொலைக்காட்சித் திரையானது, ஜேர்மன் தொலைக்காட்சி தொழில்நுட்ப உபகரண உற்பத்தி நிறுவனமான 'லோவ்' (Loewe) என்ற நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய தொலைக்காட்சியானது, 'லோவ் இன்விசியோ' (Loewe Invisio) என்று அழைக்கப்படுகின்றது. இது LCD மற்றும் புதிய தொழில்நுட்பமான TOLED என்பன இணைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டதாகும்'' என்று இதன் வடிவமைப்பாளரான மைக்கல் கிரிப் தெரிவித்துள்ளார்.

இந்தத் தொலைக்காட்சித் திரை ஒளி ஊடுருவும் தன்மைகொண்டதாக இருந்தாலும் அதில் தெரியும் காட்சிகள் ஒளி ஊடுருவும் தன்மைகொண்டவை அல்ல. மாறாக, இந்தத் திரையினூடாக காட்சிகள் யாவற்றையும் மிகவும் துல்லியமாகப் பார்க்கலாம் என்று கிரிப் மேலும் கூறியுள்ளார். (இ)



இது மற்றுமொரு புதிய தொலைக்காட்சி ஆகும். இதனை நீங்கள் விரும்பியவாறு நேராக நிமிர்த்தி வைத்தோ அல்லது குறுக்காக வைத்தோ நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிக்கலாம்.


புதிய தொழில்நுட்பத்திற்கமைய, இவ்வாறான விசாலமான திரைகள் தற்போது தயாரிக்கப்படுவதில்லை.



# நாய்களுக்கும் தொலைக்காட்சி அலைவரிசையொன்று...!



இன்று உலகளவில் பல்வேறு நாடுகளில் செல்லப்பிராணிகளாக வளர்க்கப்படும் நாய்களுக்கென்று பிரத்தியேக சலூன், ஹோட்டல் என்றெல்லாம் அமைக்கப்பட்டுவிட்டன. அந்த வரிசையில் தற்பொழுது நாய்களுக்கென்று தொலைக்காட்சி அலைவரிசையொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் சென் டியாகோ மாநிலத்தில் முதலில் ஒளிபரப்பாகும் இந்த நாய்களுக்கான தொலைக்காட்சி அலைவரிசையானது (Dog TV), ஏனைய மாநிலங்களுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது. நாய்கள் மீது அதீத அன்பு செலுத்துபவர்கள் கட்டணம் செலுத்தி இந்த அலைவரிசையினை கேபிள் ஊடாகப் பெற முடியும். உங்கள் வீட்டுச் செல்லப்பிராணியாகவுள்ள நாயின் பொழுதுபோக்குக்காக, இந்தத் தொலைக்காட்சி அலைவரிசையைப் பார்த்து ரசிப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கலாம். நாய்களுக்கான இந்த தொலைக்காட்சி அலைவரிசைக்காக, கெமரா ஒளிப்பதிவிலும் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்யும்போதுகூட, நாய்களின் கண்மட்டத்திற்கு ஏற்றவாறே, காட்சி ஒளிப்பதிவுகளும் செய்யப்படுகின்றன.



நாய்களுக்குத் தென்படும் நிறங்கள் மட்டுமே டோக் டிவி திரையில் உள்ளன.

''இந்த தொலைக்காட்சி அலைவரிசைக்காக, நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும்போது நிறம், ஒலி குறிப்பாக, இசை என்பனவற்றை நாய்களைக் கவரும் விதத்தினை நோக்கமாகக்கொண்டு மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த அலைவரிசையில் விளம்பரங்கள் இல்லை. தரப்படுத்தல்களோ, மறு ஒளிபரப்புகளோ இல்லை. மாதாந்தம் இதற்கு 4,999 அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட வேண்டும்'' என்று டோக் டிவி நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியான கிலாட் நியூமன் கூறுகின்றார்.

எவ்வாறாயினும், நாய்களுக்கு புலப்படும் விடயம் பற்றிய தெளிவு உள்ளதா? என்ற கேள்விக்கு மசாசுசெட்ஸ் பல்கலைக்கழகத்தின் கால்நடை சிறப்பு மருத்துவக் கலாநிதி நிக் டொட்மன் பதிலளிக்கையில்; ''அது பற்றிய ஆய்வுகள் தொடர்கின்றன. ஆனால், திரையில் வரும் நாய்களை ஏனைய நாய்களால் இனம் காண முடியும். குறிப்பாக, தனது இனத்தைச் சேர்ந்த நாயைப் பார்த்ததும் அது குரைக்கின்றது. ஒலிகளை நாய்கள் விளங்கிக்கொள்கின்றன என்பது உறுதியான விடயமாகும். குரைக்கும் சத்தம், சைரன் சத்தம் என்பனவற்றை அவற்றால் உணர முடியும். இதனால், டோக் டிவியில் ஒலி அலைகளைக் கவனமாகவே கையாள வேண்டும்'' என்று கூறியுள்ளார்.

எனினும், டோக் டிவி நிகழ்ச்சிகளில் நாய்களின் செவிகளுக்கு இனிமையான விதத்திலேயே இசை சேர்க்கப்பட்டுள்ளது. சாதாரண அலைவரிசைகளில் வரும் வெடிப்புச் சத்தம், ரொக், ஜெஸ் ஒலிகள் இங்கு சேர்க்கப்படவில்லை. அத்துடன், நாய்களுக்கு நீலம், மஞ்சள் நிறங்களே தென்படும். பச்சை, சிவப்பு நிறங்கள் தென்படாது. எனவே, இந்த டோக் டிவியில் கையாளப்படும் நிறங்களும் சாதாரண தொலைக்காட்சி அலைவரிசைகளில் கையாளப்படும் நிறங்களைவிட வித்தியாசமானவை. அத்துடன், நாய்களை சோம்பலின்றி உற்சாகமாக வைத்திருப்பதே டோக் டிவி யின் பிரதான நோக்கம் என்று நியூமன் மேலும் தெரிவித்துள்ளார். (இ)


டோக் டிவியின்மூலம் நாளாந்தம் புதிய அனுபவங்களை நாய்களால் பெற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர் (மருத்துவம்)

## வில்லெம் எய்ன்தொவென்


(1860-1927)

இன்றைய இந்தோனேஷியாவில் 1860 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி வில்லெம் எய்ன்தொவென் அவர்கள் பிறந்தார். இவரின் தந்தை ஒரு பிரபலமான மருத்துவராவார். ஆனால், வில்லெம் சிறு குழந்தையாக இருக்கும்பொழுதே, அவரின் தந்தையார் இறந்துவிட்டார். அதனால், தாயார் தமது குழந்தைகளுடன் தாய்நாடாகிய நெதர்லாந்தில் குடியேறினார். பாடசாலைக் கல்வி முடிந்ததும் மருத்துவக்கல்வியில் இணைந்த வில்லெம் 1885 ஆம் ஆண்டில் மருத்துவக் கலாநிதிப் பட்டம் பெற்றார். இதன்பின்னர், அவர் நெதர்லாந்தின் லெய்டன் மருத்துவக் கல்லூரியில் பேராசிரியராக இணைந்தார்.

தமக்குக் கிடைத்த வேலையை செய்த படியே, நேரத்தை ஒதுக்கி பல்வேறு துறைகளில் கண்டுபிடிப்புகளை மேற்கொண்டு சாதனை படைக்க வேண்டும் என்ற ஆர்வம் ஆரம்பகாலம் முதல் வில்லெம் அவர்களுக்கு அதிகமாகவே இருந்தது. ஆனால், அவரது ஆசான்கள் ஒரே துறையில் அவரின் திறமைகளைக் குவித்து ஆய்வுகளை மேற்கொண்டால், ஏனையோரால் சாதிக்க முடியாத பல அரிய கண்டுபிடிப்புகளை அவர் மேற்கொள்ளலாம் என உற்சாகப்படுத்தினர். இறுதியில் அதனை ஏற்றுக்கொண்டு முழுமூச்சுடன் ஒரே துறையில் தனது ஆய்வுகளை வில்லொம் முடுக்கிவிட்டார்.

முன்னைய காலங்களில் இதயம் சம்பந்தமான நோய்களைக் கண்டறிய இதயத்துடிப்பையே பிரதானமாக நம்பியிருந்தனர். இதயத் துடிப்பை அறிய மருத்துவர்கள் இரு முறைகளைக் கையாண்டனர். முதலாவதாக நோயாளியின் மணிக்கட்டில் நாடியைப் பிடித்துப் பார்த்து என்ன நோய் என்பதை அறிதல். இரண்டாவது, வைத்தியர் நோயாளியின் நெஞ்சில் தனது காதினைப் பதித்து நோயைக் கண்டறிதல் இந்த இரண்டு முறைகளினாலும் நோயாளிகள் காப்பாற்றப்பட்டனர். ஆனால், சில சமயங்களில் தோல்வியிலேயே அது முடிந்தது. இதனால், நோயாளிகள் மரணத்தைத் தழுவ நேரிட்டது.

ஆகவே, இப்படிப்பட்ட மருத்துவ சிக்கல்களுக்கு ஒரு நிரந்தரமான சிறந்த அணுகுமுறை அத்தியாவசியமானது என உணரப்பட்டது. இதனை நிறைவேற்றும் நோக்கில் நாடித்துடிப்பு மற்றும் இதன் மூலகாரணமான இதயத்துடிப்பை மிகத் துல்லியமாக அறிவதில் ஒரு வியத்தகு முன்னேற்றத்தைக் கொண்டு வந்துவிடவேண்டும் என முனைந்த வில்லெம் 10 வருடங்கள் தொடர்ந்து மேற்கொண்ட ஆய்வுகளின் பலனாக 1901 இல் இதயத் துடிப்பின்போது வெளியாகும் மின்சாரத்தினைப் பதியும் நவீன உபகரணம் ஒன்றை அமைத்தார்.

'கேல்வனோ மீற்றர்' எனும் மின் உபகரணத்தைப் பயன்படுத்தி நெஞ்சுவரை குடைந்து சென்று இதயத்துடிப்பினை சுலபமாகப் பதிவு செய்யும் நவீன முறை உதயமானது. அது 'Electro Cardio Gram'(E.C.G) என்று அழைக்கப்பட்டது. இந்த E.C.G இயந்திரம் மூலம் இதயத்துடிப்பின் போக்கினை அறிந்து எந்தவகையான இதய நோயையும் கண்டுபிடித்துவிடும் வழி பிறந்தது. அத்துடன், மாரடைப்பைக் கூட முன்கூட்டியே அறிவிக்கும் அபாய மணியாக E.C.G இயந்திரம் விளங்குகின்றது. இந்த அரிய பணியை மேற்கொண்டதற்காக 1924 ஆம் ஆண்டு மருத்துவத்திற்கான நொபெல் பரிசு வில்லெம் எய்ன்தொவென் அவர்களுக்கு வழங்கப்பட்டது. சாதனையாளரான வில்லெம் எய்ன் தொவென் 1927 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதி இயற்கை எய்தினார். (ஆர்.ஜே.)

# நன்மை செய்யின், நன்மையே விளையும்

ஒரு ஏழை விவசாயி தன் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தபோது, திடீரென ஒரு கூக்குரல் கேட்டது. இதனால், பதட்டமடைந்த அவர் சத்தம் வந்த திசை நோக்கி ஓடினார். அங்கு ஒரு சிறுவன் புதைகுழியில் சிக்கி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தான். விரைந்து செயற்பட்ட விவசாயி அச்சிறுவனைக் காப்பாற்றினார்.

அடுத்தநாள் காலை அந்த விவசாயியின் வீட்டிற்கு, அந்தச் சிறுவனும் அவனது தந்தையும் வந்தனர். அவனின் தந்தை பெரும் பொருளும் புகழும் மிக்க ஒரு செல்வந்தர். அவர் அந்த விவசாயிக்கு நன்றி கூறிவிட்டு பிரதியுபகாரமாக உங்களுக்கு என்ன வேண்டும்? என்று கேட்டார். ''எதுவும் வேண்டாம்'' என மறுத்தார் விவசாயி. இருவரும் உரையாடிக்கொண்டிருக்க, அந்த விவசாயியின் மகன் வந்தான். அவனைக் கண்ட அந்தப் பிரபு,





''எனது செலவில் உங்கள் மகனைப் படிக்க வைக்கிறேன்..... சம்மதமா?'' என்றார். விவசாயி சம்மதித்தார். அந்த விவசாயியின் மகன் படித்து மருத்துவப் பட்டம் பெற்றதோடு, மருத்துவ ஆய்வுகளிலும் ஈடுபட்டு, 'பென்சிலின்' எனும் மருந்தையும் கண்டுபிடித்தார்.

அவ்வாறிருக்கையில், அந்த செல்வந்தரின் மகனுக்கு ஒரு நோய் ஏற்பட்டது. அதுதான் நியுமோனியா. இந்த நோயால் அவதியுற்ற செல்வந்தரின் மகனுக்கு ஒரேயொரு தீர்வாக விவசாயியின் மகன் கண்டுபிடித்த பென்சிலின் மருந்து உதவியது. அவர் கண்டுபிடித்த மருந்தால்தான் செல்வந்தரான ராண்டல்ப் பிரபுவின் மகன் உயிர் பிழைத்தான்.

✱ விவசாயி பிளெமிங்கின் மகன்தான் 1945 இல் பென்சிலின் கண்டுபிடிப்புக்காக, நொபெல் பரிசை வென்ற, உலகப்புகழ்பெற்ற விஞ்ஞானி சேர். அலெக்ஸாண்டர் பிளெமிங்

✱ ராண்ட்லப் பிரபுவின் மகன்தான் இரண்டாம் உலகப்போர் (1939-1945) காலத்தில் பிரித்தானியப் பிரதமராக பதவி வகித்து, உலகத்தலைவர்களில் ஒருவராகப் போற்றப்படும் சேர். வின்சென்ட் சேர்ச்சில்! (இரண்டு விரல்களை 'V' வடிவில் காட்டும் 'V for Victory' வெற்றியின் குறியீட்டை அறிமுகப்படுத்தியவர்).

ஜெ.விபாகர்



படத்தை இங்கே ஒட்டவும்

விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

பாடசாலை: ..............................

வகுப்பு: ..............................

திகதி: ..............................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

## விஜய் மாணவர் கழகம்


அங். இல: 4740
கே.எம்.ஆதில்,
ரங்வெடியாவ,
கலேவெல.


அங். இல: 474
றொ.கி.எறிக்,
3 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.


அங். இல: 4742
ஆர்.எஃப்.சுமையா,
தஸ்கர,
முறுதகஹமுலை.


அங். இல: 4743
மு.அச்சயன்,
சிவன்கோவில் வீதி,
உக்குளாங்குளம்.


அங். இல: 4744
கு.பகுதரன்,
இணுவில்,
யாழ்ப்பாணம்.


அங். இல: 4745
ஆர்.ரியாஸத்,
பனிதுடுமுல்ல,
நாவலப்பிட்டி.


அங். இல: 4746
ஏ.ஆகில் அஹமட்,
பல்லேகம,
தெல்தோட்டை.


அங். இல: 474
எ.எம்.அக்மல்,
மிஹ்ராஜ் வீதி,
பொத்துவில்-04.


அங். இல: 4748
ஜே.அமல்தர்சா,
உப்புக்குளம்,
மன்னார்.


அங். இல: 4749
எம்.எம்.மிஃப்ரி,
தக்கியா வீதி,
போரத்தொட்ட.


அங். இல: 4750
முஹம்மட் ஸாஹிக்,
இஸ்னாப்புள்ள வீதி,
தர்கா நகர்.


அங். இல: 4751
என்.எம்.சஹ்மீன்,
தாருள் ஹஸனாத்,
ஹெம்மாதகம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நுளம்புச் சுருள்களின் புகையினால் அபாயம்

நுளம்புகளை விரட்டுவதற்கெனப் பயன்படுத்தப்படும் நுளம்புச் சுருள்களில் இருந்து வெளியேறும் புகையால் நீரிழிவு நோய் ஏற்படுவதாக இந்திய ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த நுளம்புச்சுருள்கள்; ஆஸ்துமா, புற்றுநோய், இருதய நோய்கள், வாதநோய்கள் என்பனவற்றுடன், இன்சுலின் அளவையும் குறைத்து வருவதாக கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், மோட்டார் வாகனங்களிலிருந்து வெளியிடப்படும் புகையை சுவாசிப்பதற்கும் நுளம்புச்சுருள் வெளிப்படுத்தும் காபன் புகையை சுவாசிப்பதற்கும் பெரிய அளவில் வித்தியாசம் இல்லை என்றும் இந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெண் மம்மி








'உலக நாகரிகத்தின் தொட்டில்' என அழைக்கப்படும் எகிப்தில் முன்னைய காலங்களில் அரசர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் இறந்துவிட்டால், அவர்களின் உடல்களை மூலிகைகளால் பதப்படுத்திப் பின்னர் அவற்றை மரக்கட்டைகளால் மூடி கல்லறைகளில் பாதுகாக்கும் நடைமுறை பின்பற்றப்பட்டது. இதனையே 'மம்மி' என்று அழைத்தனர்.

அதன்படி, அண்மையில் சுவிட்ஸர்லாந்தைச் சேர்ந்த பெசெல் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர், எகிப்தில் மம்மி குறித்த ஆய்வொன்றில் ஈடுபட்டனர். அதன்போது, 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்லறை ஒன்றைக் கண்டுபிடித்தனர். மலை முகடுகளுக்குள் அமைக்கப்பட்டிருந்த இந்த கல்லறையைத் தோண்டி எடுத்தபோது, அங்கு பெண் மம்மி ஒன்று பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதைக் கண்டனர்.

அதில் செதுக்கப்பட்டுக் காணப்பட்ட குறிப்புகளிலிருந்து அந்த மம்மி கி.மு. 945-712 இற்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த பெண் ஒருவருடையது என்றும் அவர், வழிபாட்டுத் தலங்களில் பாடகியாக இருந்தவர் என்பதும் தெரியவந்துள்ளது. உலகையே வியப்பில் ஆழ்த்தியுள்ள இந்த மம்மி குறித்து, தொல்பொருள் துறையினரும் வரலாற்று ஆய்வாளர்களும் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அழ வைக்கும் வெங்காயம்



Allium குடும்பத்தைச் சேர்ந்த தாவரமான வெங்காயத்தை வெட்டும்போது, அதன் செல்கள் சிதைபடுவதனால், அதிலுள்ள alliinases என்னும் என்சைம்கள் சிதைவடைந்து amino acid suphoxides களை உற்பத்தி செய்கின்றன. அவை மேலும் சிதைவடைந்து சல்ஃபீனிக் அமிலத்தை உற்பத்தி செய்கின்றன. சல்ஃபீனிக் அமிலம் நிலையற்றதன்மை கொண்டமையால், இவை Syn-propanethial- S- oxide எனும் வாயுவாக மாற்றமடைந்து காற்றில் பரவுகின்றது. அவ்வாறு கண்களை அடையும் இந்த வாயு, கண்ணிலுள்ள நீர்ப்பசையுடன் சேர்ந்து கந்தக அமிலமாக மாற்றமடைந்து, கண்களில் உள்ள நரம்பு முனைகளில் எரிச்சல் உணர்வைத் தூண்டிவிடுகின்றது. இதன்போது, அமிலத்தின் தாக்கத்தைக் குறைப்பதற்காக, கண்ணீர்ச் சுரப்பிகள் இயங்கி கண்ணீரைச் சுரக்கின்றன. இறுதியில் கண்ணீரின் உதவியால் எரிச்சலை உண்டாக்கும் கந்தக அமிலம் அகற்றப்படுகின்றது.






அத்துடன், வெங்காயத்தின் வேர்ப்பகுதியில் எரிச்சலை ஏற்படுத்தும் வாயு அடர்த்தியாகக் காணப்படுகின்றது. மிகவும் கூர்மையான கத்திகொண்டு வெங்காயத்தை வெட்டுவதனூடாக, வெங்காயத்தின் செல்களுக்கு சேதம் ஏற்படுவது குறைக்கப்படுகின்றது. இதனால், எரிச்சலூட்டும் வாயு வெளிப்படுதலும் குறைவடைகின்றது. மேலும், ஜீன்களை செயலிழக்கச்செய்யும் உயிரி தொழில்நுட்பம் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையால், இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கண்ணீரை வரவழைக்காத வெங்காய இனத்தை நியூஸிலாந்தில் உள்ள பயிர் மற்றும் உணவு நிறுவனம் உருவாக்கியுள்ளது.



# அந்தாட்டிக்காவின் பனிக்கட்டிக்கடியில் மறைந்திருக்கும் ஏரி



பனி படர்ந்து காணப்படும் அந்தாட்டிக்கா பிரதேசத்தில், உலக நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆய்வுகளை மேற்கொண்ட வண்ணமே உள்ளனர். அதன்மூலம் பல்வேறு ஆச்சரியமான கண்டுபிடிப்புகளும் நிகழ்ந்துகொண்டேதான் இருக்கின்றது. அதன்படி, அண்மையில் அந்தாட்டிக்காவின் பனிக்கட்டிக்கு அடியில் ஏரி ஒன்று இருப்பது தெரியவந்துள்ளது. இதனை ரஷ்ய விஞ்ஞானிகளே கண்டுபிடித்துள்ளனர்.



ரஷ்யாவின் ஆர்ட்டிக் மற்றும் அந்தாட்டிக்கா ஆராய்ச்சி நிறுவன நிபுணர்கள் அங்கு உறைந்து கிடக்கும் பனிக்கட்டியை ட்ரில்லர் இயந்திரத்தினூடாக சுமார் 3,768 மீற்றர் ஆழத்துக்கு (4 கி.மீ) பூமியில் துளையிட்டுள்ளனர். அப்போதுதான் பனிக்கட்டிக்கடியில் ஏரி ஒன்று மறைந்திருப்பது தெரியவந்துள்ளது. அந்த ஏரியும்கூட, பனிக்கட்டியாகத்தான் காணப்படுகின்றது. அந்த ஏரியின்மீது 2 கோடி ஆண்டுகளாகப் பனி மூடிக் கிடக்கிறது. அந்த ஏரியில் ஒட்சிசன் காணப்படுகின்றமையால், அங்கு சில நுண்ணிய உயிரினங்களும் வாழ்கின்றன. இந்தத் தகவல்கள் பனிக்கட்டியைத் துளையிட்டு ஏரியிலிருந்து எடுக்கப்பட்ட நீரின்மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணினி ஐயங்கள்



# மின்சாரம் தடைப்படுவது கணினிக்குப் பாதிப்பா?

கணினிக்கு வழங்குகின்ற மின்சார வலு இடைக்கிடையே கூடிக் குறைவது கணினிக்குப் பாதிப்பை ஏற்படுத்த வல்லதா?

மின்சாரம் கூடிக் குறைவது கணினிக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம். சில சந்தர்ப்பங்களில் ஒரு சில நொடிகளுக்கு மின்சாரம் தடைப்பட்டு திடீரென மின் தொடர்பு ஏற்படுவதுண்டு. இது கணினிக்கு அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. ஆகையால், இத்தகைய பாதிப்புக்கள் ஏற்படாமல் நீண்டகாலத்திற்கு கணினியைப் பாவிப்பதற்குரிய வழிவகைகளை நாம் கையாள வேண்டும். அதற்குரிய சிறந்த வழிவகை தான் UPS எனப்படும் தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்கக்கூடிய மின் கட்டமைப்புக் கருவியை பொருத்துவதாகும்.



அதாவது, கணினிக்கு வழங்குகின்ற மின்சாரத்தை யூ பி எஸ் (UPS) ஊடாக வழங்கப்படல் வேண்டும். மின்சார விநியோகம் கூடிக் குறையும்போது, அதன் தாக்கம் கணினியைப் பாதிக்காத வகையில் இந்த 'யூபிஸ்' கருவி கட்டுப்படுத்தும். ஏதும் சந்தர்ப்பத்தின்போது, முழுமையாக மின்சாரம் தடைப்படின், குறித்த யூ பி எஸ் இனுள் உள்ள பற்றரி சுயமாக இயங்கி கணினிக்குத் தேவையான மின்சாரத்தை வழங்கும். ஆனால், வரையறுக்கப்பட்ட குறுகிய ஒரு நேரத்திற்கே இவ்வாறு இது தொழிற்படும். இது குறுகிய நேரமாக இருந்தாலும் பிரதான மின்விநியோகம் தடைப்பட்டுள்ளது என்பதை உணருகின்ற கணினிப் பாவனையாளர் தனது கணினியைப் பாதுகாப்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கான கால அவகாசத்தை மேற்படி யூ பி எஸ் வழங்குகின்றது எனலாம்.

# அழிந்த 'ஃபைல்ஸை' மீளப் பெறலாம்



ஏதேனும் ஃபைல் (File) அழிவடைந்து பின்னர் ரீசைக்கில் பின்னில் இருந்தும் (Recycle bin) அது அழிக்கப்பட்டால் பின்னர் அந்த ஃபைலை மீண்டும் பெறுவதற்கான வழிவகைகள் ஏதாவது உள்ளனவா?

ஃபைல் ஒன்றை அழித்து (டிலீட் -Delete) விட்ட பின்னர் ஏதேனும் ஒரு காரணத்தினால் மீண்டும் அதே ஃபைலைப் பெற விரும்பினால் அதற்குத் தேவைப்படும் வகையிலேயே, 'ரீசைக்கிள்' பின் என்ற பகுதி உள்ளது.

ஆனால், தவறுதலாக 'ரீசைக்கிள்' பின் பகுதியிலிருந்தும் அது அழிக்கப்பட்டுவிட்டால் மீள அதனைப் பெறுவது கடினம். எனினும், இதற்கு ஒரேயொரு வழிதான் உள்ளது. அதாவது, 'ரிக்கவரி சொஃப்ட்வெயார்' எனப்படும் விசேட கணினி புரோகிராமைப் பயன்படுத்தியே இதனை செய்ய முடியும். இருப்பினும் அழிக்கப்பட்ட ஃபைல்களின் தன்மை மற்றும் ரிக்கவரி சொஃப்ட்வெயரின் வல்லமையையும் பொறுத்தே இதன் சாத்தியப்பாடு தங்கியுள்ளது.

இதற்கான மென்பொருள் ரெக்குவா (Recuva) என குறிப்பிடப்படுகின்றது. இதற்கான இணையத்தள முகவரி: www.piriform.com/recuva.

# ஓவியம் வரையும் 'பெம்பூ ஃபிளேஷ்'



'கிரஃபிக் டெப்லட்' கணினிகளின் வரிசையில் மெக்கொம் நிறுவனம் புதிய டெப்லட் பெம்பூ ஸ்பிளேஷ் (Bamboo Splash) கணினிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. டிஜிட்டல் முறையிலான ஓவியங்களை வரைவதற்கு இது மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

குறிப்பாக, திரைப்படம் தொடர்பான ஓவியங்களை படைப்பதற்குத் தேவையான கிரஃபிக்பேட் (Graphic pad) இதில் மிகவும் நுண்ணியதாக அமைக்கப்பட்டுள்ளது. 79 அமெரிக்க டொலர் விலையைக் கொண்டுள்ள இந்த 'டெப்லட் பெம்பூ' கணினியைப் பயன்படுத்துபவர்களுக்கு அது பாரிய பயனை வழங்கக் கூடியதாக இருக்கும். மேற்படி பேட் (Pad) டில் வரைவதற்கு ஏற்ற பேனையொன்று காணப்படும். இது எவ்வித வயர் தொடர்புகளும் அற்றதாக இருப்பதனால் இதனைக் கொண்டு 'பேட்'டில் ஓவியத்தை வரையும்போது, கடதாசியில் வரைவதைப் போன்ற உணர்வு இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2012, ஜூலை மாதம் 11 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday July 11, 2012.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org